


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 255 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 32ஆம் திகதி வியாழக்கிழமை (15.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 25, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50






நீளம்: 13.372 செ.மீ.



எடை: 801 கிராம்



## அதிக எடை, மிக நீளம் கொண்ட சிறுநீரகக் கல்லை அகற்றி சாதனை

### கின்னஸில் இடம்பிடித்தது வைத்தியர் சுதர்ஷன் தலைமையிலான குழு

•ரஞ்ஜன் அருண்பிரசாத்

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட சத்திர சிகிச்சைகளின்மூலம் நிகழ்த்தப்பட்ட உலக சாதனையை முறியடித்து மிக நீளமானதும் அதிக எடைகொண்டதுமான சிறுநீரகக் கல்லை அகற்றி இலங்கை வைத்தியர்கள் குழு கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

கொழும்பு இராணுவ வைத்தியசாலையின் ஜெனிட்டோ சிறுநீரகப் பிரிவின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் லெப்டினன் கேர்ணல் வைத்தியர் குகதாஸ் சுதர்சன் தலைமையிலான வைத்திய குழாம் இந்த உலக சாதனையை நிகழ்த்தியுள்ளது.

முன்னாள் இராணுவ வீரர் ஒருவரின் சிறுநீரகத்திலிருந்து அதிக எடை மற்றும் அதிக நீளம் கொண்ட கல்லொன்று, கடந்த முதலாம் திகதி அகற்றப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த சிறுநீரகக் கல்லின் நீளமானது 13.372 சென்றிமீற்றர் என்பதுடன், அதன் எடையானது...

02 பக்கம்

## தனிவழியில் செல்லத் தயார்



### ஜனாதிபதிக்கு இராஜாங்க அமைச்சர் சனத் எச்சரிக்கை

•நா.தினுஷா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தனிமைப்படுத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை. மாறாக எங்களை தனிமையாக்கி விட்டு அவர் வேறு வழியில் சென்றால் அவரின் பின்னால் செல்ல நாங்கள் தயாராக இல்லை. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு கிடைக்கும் மரியாதையை பொறுத்தே நாங்கள் தொடர்ந்து அரசாங்கத்தில் நீடிப்பதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும்.

02 பக்கம்



# பாராளுமன்றம் கலைக்கப்படும்?

### ஆளுங்கட்சி பிரமுகர்களுடன் ரணில் மந்திராலோசனை

•நமது அரசியல் செய்தியாளர்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தொடர்ந்து அழுத்தங்களைத் தருமாயின் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்வதைத் தவிர வேறு வழியில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆளுங்கட்சி பிரமுகர்கள் சிலரிடம் தெரிவித்திருப்பதாக நம்பகரமாக அறியமுடிந்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்டத் தலைவர்கள் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி அழைத்த கூட்டமொன்றை பகிஷ்கரித்த நிலையில், ஜனாதிபதியின் பாராளுமன்ற கலைப்பு தொடர்பான யோசனை வெளிவந்திருக்கிறது.

பொதுத் தேர்தலை நடத்தினால் புதியதொரு பாராளுமன்றம் வருமென்பதால் இப்போதுள்ள அரசியல் நெருக்கடிக்கு அதுவே தீர்வென ஜனாதிபதி கருதுவதாக தெரிகிறது.

இதற்கிடையில், பொதுஜன பெரமுனவின் ராஜபக்ஷவாதிகள் அரசாங்கத்திலிருந்து வெளியேறினால் அது அரசாங்கத்துக்கு மேலும் பலமாக அமையுமென்றும் வெளியே போவோரைவிட அதிகமானோர் எதிர்க்கட்சியில் இருந்து வருவதற்குத் தயாராக இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

## விரைவில் பாரதூரமான தொழிற்சங்க நடவடிக்கை

### தொழில் வல்லுனர்கள் சிவப்புக் கொடி

•நா.தினுஷா

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள அநீதியான வருமான வரியில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களை இந்த மாதத்தில் நாட்டுக்கு அறிவிக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிக்கமைய, எவ்வாறான திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளார்கள் என்பதை நாட்டுக்கு பகிரங்கப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கத் தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அடுத்த வாரத்தில் மீண்டும் பல்வேறு பாரதூரமான தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க ஒன்றியம் அறிவித்துள்ளது.

02 பக்கம்

## மின்சார சபையை விற்க அரசாங்கம் தீவிர முயற்சி

### கட்டணம் அதிகரிக்குமென தொழிற்சங்கம் சுட்டிக்காட்டு

•நா.தினுஷா

மின்சார சபையை 15 பிரதான நிறுவனங்களுக்கு விற்பனைசெய்ய அரசாங்கம் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. அவ்வாறு முழுமையாக மின்சார சபையை விற்று விட்டால், எதிர்வரும் 2024, ஜனவரி மாதம் முதல் தற்போதுள்ள கட்டணத்தை விட பல மடங்கு மின் கட்டணம் செலுத்த நேரிடும் என்று மின்சார சபை சேவைச் சங்கத்தின் பிரதான செயலாளர் ரஞ்சித் ஜயலால் எச்சரிக்கை விடுத்தார். மின்சார சபையை தனியார் மயப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட யோசனை மீளப்பெறப்பட வேண்டும்.

02 பக்கம்

## ஊடகங்களை நேர்படுத்தவே புதிய சட்டம்

### கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் அனுராத

•கலஹா செய்தியாளர்

ஊடகங்களினூடாக மக்களுக்கு சரியான தகவல்களை கொண்டு செல்வதற்கு பதிலாக சமூக ஊடகங்களில் வரும் தவறானவற்றை மீண்டும் மக்கள் மத்தியில் கொண்டு சென்று நாட்டு மக்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் ஊடகங்களை நேர்மையான வழியில் பயணிக்கச் செய்யவே ஒலி - ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலத்தை கொண்டுவரவுள்ளோம் - என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரட்ண தெரிவித்தார்.

கம்பளை, தொழுவ பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இரத்தினக்கற்கள் பட்டை தீட்டுதல் மற்றும் ஆபரணங்கள் வடிவமைப்பு பயிற்சி நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

02 பக்கம்

## உலகளாவிய நிதி உடன்படிக்கை மாநாடு

### பங்கேற்க ரணிலுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி அழைப்பு

புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட உலகத் தலைவர்களுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் அழைப்பு விடுத்துள்ளார்.

02 பக்கம்

## மாத்தறையில் ஆசிரியை குத்திக்கொலை

த. யுவராஜ்

பாடசாலையில் கற்பித்தல் நடவடிக்கை நிறைவடைந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியை ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் மாத்தறையில் நேற்று (14) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மாத்தறை, ஊருபொக்க பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவரது காதலனே இந்த கொலையைச் செய்திருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் குறித்த நபரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## அமைச்சர் விதுரவை பதவி நீக்க வேண்டும்

### நில அபகரிப்புக்கு அவரே காரணமென தமிழ்க் கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் வலியுறுத்து

•சாவகச்சேரி செய்தியாளர்

வடக்கு, கிழக்கில் கட்டாய நில அபகரிப்புக்கு பிரதான காரணகர்த்தாவான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவை பதவி நீக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை ஜனாதிபதியிடம் வலியுறுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பகுதிக்கு நேற்று (14) வருகை தந்தபோது தொல்லியல் திணைக்களப் பணிப்பாளரது இராஜினாமா தொடர்பாக ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோது சுமந்திரன் எம்.பி. இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.



02 பக்கம்



## கண்ணாடியில் தெரியும் நாட்டுக்கான தலைவர்

### ஜனாதிபதிக் கனவை சூசகமாகக் கூறுகிறார் பொன்சேகா

•நமது நிருபர்

கண்ணாடி முன் நின்று பார்க்கும்போது நாட்டை வழிநடத்தக்கூடிய ஒரு தலைவரை காண்பதாக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று முன்தினம்(13) தெரிவித்தார்.

02 பக்கம்



## அதானியின் காற்றாலை மின் திட்டம் மன்னாரில்

### 2024 இறுதியில் ஆரம்பம்

10 பக்கம்

## ரூ.10 கோடி சொத்து 03 சொகுசு வாகனங்கள்

### பாலியல் தொழிலால் கொள்ளுப்பிட்டியில் கோலோச்சிய மாது

•கே. சுபானி

கொள்ளுப்பிட்டியில் விபசார விடுதியொன்றை சுற்றிவளைத்தபோது கைதுசெய்யப்பட்ட 24 வயதுடைய யுவதி 10 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கு உரிமையாளர் என்பதுடன் அவருடைய பெயரில் மூன்று சொகுசு மோட்டார் வாகனங்கள் உள்ளதுடன் தற்போது பிலியந்தலை பகுதியில் இரண்டு மாடிக் கட்டடமொன்றை நிர்மாணித்து வருவதாக தெரியவந்துள்ளது.

உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து பெரும் செல்வந்தர்கள் வருகை தருவதாகக்...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



ரணிலை ஜனாதிபதியாக்கினது பொதுஜன பெரமுன புலிவாலைப் பிடிச்ச கதைதான் பாருங்கோ..!



### உஷ்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பிரபல தொழிலதிபர் தம்மிக்க பெரேராவை களமிறக்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உயர்மட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதாம்.

ஆனால் அந்த யோசனைக்கு கட்சிக்குள் அனுமதி கிடைப்பதில் சந்தேகம் உள்ளதாம். அவரைவிட தினேஷ் குணவர்தனவை வேட்பாளராக நியமிக்கலாம் என்பது பலரின் கருத்தாம்.

## தனிவழியில் செல்லத்...

எங்களின் நிலைப்பாடுகளுக்கு முரணான தீர்மானங்கள் எடுக்கப்படும் இடத்தில் தொடர்ந்து இருக்க வேண்டிய அவசியமும் இல்லை என்று நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார். நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினரொருவருக்கும் அமைச்சரொருவருக்கும் குறைந்தது சலுகையாக வாகனுமும் எரிபொருளும் சிறியதொகை மேலதிக கொடுப்பனவு மாத்திரமே கிடைக்கிறது. பாலித்த ரங்கே பண்டாரவுக்கு அந்த பணம் பெருந்தொகையாக இருக்கலாம். ஆனால், எனக்கு அந்த நிதி பெருந்தொகையாக இருக்காது. எனக்கென தனியான வியாபாரம் இருக்கிறது. எனது குடும்பத்தாரை என்னால் பராமரிக்கவும் முடியாது. வியாபாரத்தில் கிடைக்கும் வருமானத்தை செலவு செய்தே அரசியலில் தொடர்ந்து இருக்கிறேன்.

அதனால், அமைச்சு என்பது எனக்கு மிகப்பெரிய விடயமாக இருக்காது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களையும் எங்களின் மாவட்ட தலைவர்களையும் எந்தளவு கவனிக்கிறார்கள், மதிக்கிறார்கள் என்ற அடிப்படையிலேயே நாங்கள் இந்த அரசாங்கத்தில் எவ்வளவு காலம் தொடர்ந்து இருப்போம் என்ற விடயம் தீர்மானிக்கப்படும்.

தொடர்ந்து எங்களை அவமதிக்கிறார்கள் என்றால், எங்களால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தில் எங்களுக்கு கிடைத்த வாக்கையும் மக்கள் இறைமையையும் அவற்றை பெற்றுக்கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உறுப்பினர்கள் அவர்களின் அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்வதற்கு இருக்கிறார்கள் என்றால், அவ்வாறானவொரு அரசாங்கத்தில் தொடர்ந்து இருக்கவேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

மக்களின் இறைமை தொடர்பில் பிரச்சினை இருக்குமாக இருந்தால் மீண்டும் தேர்தலொன்றை நடத்துவதே சிறந்த விடயமாக இருக்கும். அவ்வாறு தேர்தலொன்று இடம்பெறுமென்றால் அந்த தேர்தலை எதிர்கொள்வதற்கு விருப்பத்துடன் இருக்கிறோம். தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடுமாகும். சரியான விடயங்களை ஆதரிக்கவும் பிழையான விடயங்களை எதிர்க்கவும் எங்களுக்கும் முதுகெலும்பு இருக்கிறது. எங்களின் வாக்குகளை கொண்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் மக்களின் விருப்பத்தை வென்று பாராளுமன்றம் வர முடியாதவர்களின் வாய்ப்பேச்சு அதிகமாகிவிட்டது. இது நீண்ட காலத்துக்கு நீடிக்கப் போவதில்லை. அரசாங்கத்தை உருவாக்கிய உறுப்பினர்கள் இருக்கும் வரையே அவர்களின் வாய்ப் பேச்சுகள் அதிகரித்திருக்கும்.

ரணில் விக்கிரமசிங்க எங்களுடன் இருக்கும் வரை அவரை தனியாளாக்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. அதற்கப்பால், எங்களை தனியாக்கிவிட்டு அவர் தனி வழியில் சென்றால் அவரின் பின்னால் செல்லும் எதிர்பார்ப்பு எங்களுக்கு இல்லை.

எந்தவொரு சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமானாலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கவேண்டும். அரசாங்கத்துடன் செயற்படும் விதத்திலேயே பெரும்பான்மை தீர்மானிக்கப்படும் என்றார்.

## ஊடகங்களை நேர்படுத்தவே...

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகங்கள் நாட்டில் நடக்கக்கூடிய நல்ல விடயங்களை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கு பதிலாக அவர்களின் எதிர்பார்ப்புகளை குழப்பியடிக்கும் வேலைகளில் ஈடுபடுவதால் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படுவதோடு பெரும் நட்டத்தையும் ஏற்படுத்துகிறது.

அதனால் தான் இந்த சட்டத்தை நாங்கள் கொண்டுவரவுள்ளோம்.

இதனால் ஊடகங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. மாறாக அது சரியான பாதையில் பயணித்து பலன் பெற வழிவகுக்கும். எமது நாட்டு சிறைச்சாலைகளில் 27ஆயிரம் கைதிகள் உள்ளனர்.

அவர்களில் 13 ஆயிரம் பேர் தண்டனை பெற்ற கைதிகள். இவர்களின் வாழ்வை மேம்படுத்த சிறைச்சாலைகளுக்குள் தொழிற்சாலைகளை அமைத்து, கைதிகளாக இருப்போருக்கு தொழில் வழங்கி அதன்மூலம் அவர்களுக்கு சம்பளமாக வழங்கப்படும் ஆயிரத்து 160 ரூபாவில் 650 ரூபாவை அவர்களின் குடும்பங்களுக்கு வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## அமைச்சர் விதுரவை...

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தொல்லியல் திணைக்களத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இருந்த பேராசிரியர் மனத்துங்க தனது பதவியை இராஜினாமா செய்த விவகாரம் நாட்டில் பெரிய வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

பேராசிரியர் மனதுங்க ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சரவை தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு விருப்பம் இல்லாதவராக தன்னைக் காட்டிக்கொண்டார். அது அமைச்சரவைக்கும் அவருக்கும் உள்ள பிரச்சினையாகும். எனக்குத் தெரிந்தவரை அவர் பதவி நீக்கப்படவில்லை. தானாக இராஜினாமா செய்துள்ளார்.

எந்தப் பதவியில் இருந்தும் இராஜினாமா செய்வதற்குரிய சுதந்திரம் உள்ளது. அமைச்சரவை கொடுக்கும் உத்தரவுகளுக்கு அமைவாக தன்னால் நடந்துகொள்ள முடியவில்லை என்பதற்காக அவர் இராஜினாமா செய்திருக்கலாம்.

ஆனால் எங்களுடைய நிலைப்பாடு என்னவென்றால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மக்களுடைய நிலங்களை அபகரிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது அந்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க. அவர் தான் வடக்கு, கிழக்கில் பல இடங்களுக்கு நேரடியாக சென்றிருந்தார்.

வடக்கில் குருந்தூர்மலைக்கு அவர் இராணுவ படைகளுடன் சென்றிருந்தார். குருந்தூர்மலையில் திரிசூலம் உடைக்கப்பட்ட தினத்தில் அவர் அங்கே இருந்திருக்கின்றார். அப்படியாக அங்கே ஒரு புதிய விகாரையும் கட்டப்பட்டுள்ளது. இந்த விடயங்களுக்கு பொறுப்பானவர் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அவருடைய பணிப்பின் கீழே தான் சட்டவிரோத நில அபகரிப்பு இடம்பெறுகின்றது.

ஆகவே, அதனை தடுக்க சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினை அந்த பதவியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும். இதனையே நாம் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சாணக்கியன் எம்.பி. கருத்து வெளியிடுகையில்,

திரியாய் பிரதேசத்தில் 3000 ஏக்கர் காணி தொல்பொருள் திணைக்களத்தின் தொல்லியல் ஆய்வுகளுக்கு அவசியம் என்று கூறி கையகப் படுத்தப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளே அதிகம் பாதிப்படைந்து வருகிறார்கள். விவசாயிகள் அவர்களின் பணிகளை செய்வதற்கு இடமளிக்குமாறும் தொல்லியல் நடவடிக்கைகளுக்கு தேவை இருக்குமாக இருந்தால் அதற்கான முறைகளை உருவாக்கிக் கொள்வோம் என்ற அறிவித்தலையே ஜனாதிபதி வழங்கியிருந்தார்.

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக இருந்த குறித்தநபர், இதற்கு முன்னர் இடம்பெற்ற கூட்டங்களின்போது அதனை செய்வதாக குறிப்பிட்டுவிட்டுச் சென்று பின்னர் அதனை செய்ய முடியாது என்று கூறுகிறார். அதற்காகவே, அரசாங்கத்தின் கொள்கையை பின்பற்ற முடியவில்லை என்றால் பதவியை இராஜினாமா செய்வதை தவிர வேறு எந்த தீர்வும் இல்லை என்பதையே அன்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி நேரடி நடவடிக்கை எடுப்பதென்றால் அமைச்சரவை அமைச்சராக இருக்கும் விதுர விக்கிரமநாயக்கவுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் பணிப்பாளர் நாயகம் என்பவர் அமைச்சர் கூறும் விடயங்களை நடைமுறைப்படுத்துபவராவார். ஆனால், அமைச்சரவை அமைச்சராக இருக்கும் விதுர விக்கிரமநாயக்க இந்த கலந்துரையாடல்களில் கலந்துகொள்வதில்லை என்றார்.

## உலகளாவிய நிதி...

புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாடு பிரான்ஸின் பெரிஸ் நகரில் ஜூன் 22 மற்றும் 23 ஆகிய திகதிகளில் தற்போதைய உலகம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காணல் என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

உலக சமூகத்தை பாதித்துள்ள பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து இந்த மாநாட்டின் ஊடாக ஆராயப்படவுள்ளது.

காலநிலை மாற்றம் மற்றும் பல்லுயிர் இழப்பு முதல் கொவிட் -19 தொற்றுநோயின் தாக்கம் வரை, உலகளாவிய சமூகம் யுத்தங்கள் உட்பட பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது. இந்த சவால்களை எதிர்கொள்ள புதிய நிதி ஒப்பந்தத்தின் அவசியத்தை உணர்ந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன், கூட்டு நடவடிக்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்துள்ளார்.

உச்சி மாநாட்டின் மற்றொரு நோக்கம், பலதரப்பு நிதித்துறையை மறுசீரமைத்தல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் இணைந்த கார்பன் அற்ற உலகப் பொருளாதாரத்துக்கான பாதையை உருவாக்குவதற்கான கூட்டான பார்வை ஒன்றை உருவாக்குவதாகும்.

18 ஆவது ஜி20 தலைவர்கள் உச்சி மாநாடு புதுடில்லியில் நடைபெறவுள்ளதோடு ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறித்த மாநாடு நியூயோர்க் மற்றும் டுபாயில் நடைபெறவுள்ள COP 28 மாநாடு உள்ளிட்ட அடுத்த ஆண்டு சர்வதேச நாட்காட்டியில் உள்ள பிரதான கலந்துரையாடல்கள் மற்றும் உச்சிமாநாடுகளுடன் பிரிஜ்டவுண் முன்னெடுப்பு (Bridgetown Initiative) உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சி நிரல்களை இணைக்கும் முயற்சிகளை பிரான்ஸ் மேற்கொண்டு வருகிறது.

அரசாங்கப் பிரதிநிதிகள், சர்வதேச நிறுவனங்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறைச் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களின் கூட்டணியை உருவாக்குவதன் மூலம் ஒரு கூட்டான பார்வைக்குள் நிலையான எதிர்காலத்துக்கான தேவையான மாற்றங்களைச் செயல்படுத்துவதை இந்த மாநாடு வலியுறுத் துகிறது.

எதிர்கால சந்ததியினருக்கான சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்பிற்கு பிரான்ஸ் ஜனாதிபதி, தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளார். கடந்த கால சாதனைகளை முறியடித்து பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் முதலீட்டை மேம்படுத்துவதற்கான அபிலாஷையை அடைவதற்கு இந்த மாநாடு பெரும் உதவியாக அமையும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

## ரூ.10 கோடி சொத்து...

கூறப்படும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டடத்தில் விபசார விடுதியொன்றை நடத்திவந்த இரண்டு தாய்வான் யுவதிகள் உட்பட 05 பேரை பாணந்துறை மத்திய குற்றத்தடுப்புப் பிரிவினர் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மூவருள் அதிக பணத்துக்கு விபசாரம் மேற்கொண்டு வந்த இலங்கையைச் சேர்ந்த 24 வயதுடைய யுவதி, அதன் மேலாளர் மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரியொருவருமே குறித்த விபசார விடுதியை நடத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு கூடுதல் பணத்துக்கு விபசாரம் மேற்கொள்வதாக அறியப்படும் யுவதி கைது செய்யப்படும்போது ஏழு வயதுடைய அவரது மகள் குறித்த விடுதியில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். குற்றத்தடுப்புப் பிரிவின் தலைமை அதிகாரி பிரதான பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க வீரசிங்கவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்படி விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

பிரதி பொலிஸ் அதிகாரி உதயகுமாரவின் தலைமையில் இரகசியமாக மேற்படி விடுதிக்கு பொலிஸ் உத்தியோகஸ்தரான ஜயலால் உளவாளியாக சென்று 10ஆயிரம் ரூபாவுக்கு பெண்ணொருவரை விலைபேசி விடுதியில் இருந்தபோதே மத்திய குற்றத்தடுப்புப் பிரிவினரால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள ஐந்து பேரில் தாய்லாந்தைச் சேர்ந்த யுவதிகள் இருவரிடமும் கடவுச்சீட்டு இல்லை என்பது தெரியவந்துள்ளது.

இதன்போது கைதுசெய்யப்பட்ட 24 வயதுடைய இலங்கை யுவதி 10 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கு உரிமையாளர் என்பதுடன் அவருடைய பெயரில் மூன்று சொகுசு மோட்டார் வாகனங்கள் உள்ளது. தற்போது பிலியந்தலை பகுதியில் இரண்டு மாடி கட்டடமொன்றை நிர்மாணித்துவருவதும் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மேற்படி சொத்துகள் அனைத்தும் விபசாரத்தினூடாக பெறப்பட்ட பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டவை என்பதுடன் அவர் நாளொன்றுக்கு ஐந்து முதல் ஆறு பேருடன் விபசாரத்தில் ஈடுபட்டு ஒரு இலட்சத்து 35ஆயிரம் ரூபா வரை பெற்றுக் கொள்வதாகவும் தெரியவந்துள்ளது.

அத்தோடு சந்தேகநபரான 24 வயதுடைய யுவதி மேற்படி விபசார விடுதியை புனர்நிர்மாணம் செய்வதற்காக அதன் மேலாளருக்கு 35 இலட்சம் ரூபா கடனாக கொடுத்துள்ளார்.

இதில் பிரதான சந்தேகநபராக அறியப்படும் இராணுவ அதிகாரி தாம் சுகயீனமுற்றுள்ளதாக தெரிவித்த நிலையில் அவர் பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபசார விடுதி கொள்ளுப்பிட்டி பொலிஸ் உயரதிகாரிகளின் உதவியுடன் கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

## விரைவில் பாரதூரமான...

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று (14) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போது அந்தச் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் வைத்தியர் ஹரித அளுத்கே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

அநீதியான வரிக்கொள்கையை மாற்றியமைத்து புதிய திருத்தங்களை கொண்டுவருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து, நாட்டு மக்களுக்கும் தெளிவுப்படுத்தலை வழங்கியிருந்தோம். எங்களின் தொடர்ச்சியான போராட்டங்களை தொடர்ந்து சில மாதங்களுக்கு முன்னால் இதில் பிரச்சினைகள் இருக்கிறது என்பதை அரசாங்கத் தரப்பினர் ஏற்றுக்கொண்டார்கள். அது தொடர்பிலான திருத்தங்களை முன்வைப்பதற்கும் இணக்கம் தெரிவித்திருந்தார்கள்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் ஒட்டுமொத்த வரிக்கொள்கையிலும் திருத்தம் மேற்கொள்ள முடியாது என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்தது. முதலாவது மீளாய்வு நடவடிக்கை ஜூன் மாதத்திலேயே இடம்பெறும். இதன்போது, தொழிலாளர்களுக்கு நீதியான தீர்வுக் கிடைக்கும் வகையில் வரிக்கொள்கையில் திருத்தம் மேற்கொள்வதாகவே அரசாங்கத் தரப்பினர் அறிவித்திருந்தார்கள்.

ஜூன் மாதத்தில் இந்த பிரச்சினைக்கு நேரடியான தீர்வொன்று முன்வைக்கப்பட்டால் மாத்திரமே எங்களின் தீர்மானத்தை அறிவிக்க முடியுமென குறிப்பிட்டிருந்தோம். அதன்பின்னர் பொறுப்புடைய தொழிற்சங்கம் என்ற அடிப்படையில் இந்த செயற்பாடுகளுக்கு சிறுது கால அவகாசத்தை வழங்குவதற்கு தீர்மானித்திருந்தோம். அதனடிப்படையிலேயே ஜூலை மாதம் வரையில் எங்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

ஆகவே, அவர்கள் தொழிற் சங்கத்தினருக்கும், மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கமைய எவ்வாறான திருத்தங்களை மேற்கொள்ள போகிறீர்கள் என்பதை பகிரங்கமாக நாட்டுக்கு அறிவிக்கவேண்டும்.

ஆனால், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கியியலாளர்கள் என்று இலக்கு வைத்து வரி அறவிடுவது சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்பார்ப்பல்ல. வரி அறவீடு பரவலாக்கப்பட வேண்டும் என்பதும் திருத்தங்களின் போது வரி வருமான வீழ்ச்சியை சந்திக்க முடியாது என்பதே நாணய நிதியத்தின் பிரதான இரு நிபந்தனைகளாக இருக்கின்றன.

ஆகவே, தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வரி வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான யோசனையொன்றையும் முன்வைத்துள்ளோம். இது தொடர்பில் ஆராய்வதற்கு தனியான குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவின் அறிக்கை ஜனாதிபதியின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அந்த அறிக்கையிலுள்ள விடயங்கள் நாட்டுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இதுதொடர்பான திருத்தங்கள் வெளிப்படுத்தப்படவில்லை என்றால் அடுத்த வாரம் பல்வேறு பாரதூரமான தீர்மானங்களை எடுக்க நேரிடும் என்றார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் வைத்தியர் சாருதத்தய இலங்கசிங்க, மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரத்ன உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டிருந்தார்கள்.

## மின்சார சபையை விற்க...

அவ்வாறு இல்லாவிட்டால் அதற்கான அழுத்தத்தை நாங்களே பிரயோகிப்போம். எதிர்வரும், 21ஆம் திகதி மின்சார சபையின் சகல அலுவலகங்களும் மூடப்படும் என்பதுடன் ஊழியர்கள் அனைவரையும் கொழும்புக்கு அணித்திரட்ட திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அநுராதபுரத்தில் நேற்று (14) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சார சபையை 15 தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தயாராகியுள்ளது. இதற்காக சட்டமூலத்தை கடந்த வருடம் மே மாதத்தின் மூன்றாவது வாரத்தில் பாராளுமன்றத்துக்கு கொண்டுவருவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால், இதுவரையில் அந்த சட்டமூலம் கொண்டுவரப்படவில்லை.

மின்சார சபை ஊழியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு, ஊழியர் சேமலாப நிதி என்பவற்றை இல்லாமல் செய்யும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். கோடி ரூபா கணக்கான நிதி செலவு செய்து மின்சார சபை 3,800 வரையிலான அத்தியாவசிய பணியாளர்களுக்கு பயற்சிகளை வழங்கியிருந்தது. அவர்களை மீளவும் கடமைக்கு இணைத்துக்கொள்வதாகவும் அவர்களுக்கு உறுதியான நியமனங்களை வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற கலந்துரையாடலில் உறுதியளித்திருந்தார்.

மின்சார சபையினால் போட்டித்தன்மையை ஏற்படுத்த முடியாது. தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டுள்ளது. மகாவலி கட்டடத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்கவுள்ளார்கள். நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை சீனாவுக்கு வழங்கவுள்ளார்கள். இந்த நாட்டுக்கென்று எதுவும் மீதமாக போவதில்லை. தற்போதே மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதளவு கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. அநீதியான கட்டணமே அறவிடப்படுகிறது.

மின்சார சபையை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கியதும் இந்தக் கட்டணம் மேலும் இரண்டு, மூன்று மடங்குகளாக அதிகரிக்கும். அவ்வாறாயின் பொறுப்புக் கூறலிலிருந்து விடுபடவே அரசாங்கம் முயற்சிக்கிறது.

இந்த நிறுவனங்களிடம் மின்சார சபையை வழங்கியதன் பின்னர் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சகல வீடுகளுக்கும் டிஜிட்டல் மீற்றர்களை பொருத்தும் எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள். அவ்வாறாயின் நாமே மின்னை இயற்றி நாமே மின் துண்டிப்பையும் செய்துகொள்ள முடியும். அதன் விளைவுகளை மக்களே அனுபவிக்க வேண்டி ஏற்படும்.

செலுத்த முடியாதளவுக்கு கட்டணம் அதிகரிக்கும் அதனை யாராலும் மாற்ற முடியாது. கடந்த காலங்களில் எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் பங்குகளை ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு வழங்கி னார்கள். நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது அந்த நிறுவனத்தால் அந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை.

ஆகவே, மின்சார சபையின் சகல அலுவலகங்களும் எதிர்வரும் 21ஆம் திகதி மூடப்படும். சகல ஊழியர்களும் கொழும்புக்கு வருவார்கள். தற்போதும் மீளச் செலுத்த முடியாதளவு கட்டணமே அறவிடப்படுகிறது. தனியார் மயப்படுத்தும் அரசாங்கத்தின் இந்த திட்டத்தை வாபஸ் பெறவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நாங்களாகவே மீளப்பெற வைப்போம் என்றார்.

## கண்ணாடியில் தெரியும்...

பூகொட மண்டாவல, ரணவிரு கிராமத்தில் இடம்பெற்ற போர்வீரர் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொன்சேகா அங்கு மேலும் கூறியதாவது,

இன்று நாட்டை ஆட்சி செய்பவர்கள் மட்டுமின்றி பலர் போர் வீரர்களை மறந்து விடுகின்றனர். இப்போது சிலருக்கு போர் நடந்ததா என்று கூட தெரியாது. மொத்தத்தில் தற்போதைய அரசாங்கம் உட்பட எந்த அரசாங்கமும் போர்வீரர்களை கண்டுகொள்ளவில்லை.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் தேவைக்காக முகாம்கள் அமைக்கப்பட்ட சில காணிகள் உள்ளன. கையகப்படுத்தப்பட்ட சில நிலங்களைத் திருப்பித் தரவும் வாய்ப்புள்ளது. ஆனால், அரசியல் நலன் கருதி அந்த நிலங்களை திருப்பி கொடுப்பதை ஏற்க முடியாது.

வடக்கு, கிழக்கில் வாக்குகளுக்காக பேராசை கொண்ட சக்திகளுக்காக பாதுகாப்பு படையினரை குறைமதிப்புக்குட்படுத்தும் மற்றும் தவறான இடத்தில் வைக்கும் போக்கு தற்போது காணப்படுகிறது. இதுவொரு கோழைத்தனமான செயல். நாங்கள் அவர்களுக்கு எதிரானவர்கள்.

தற்போதைய ஆட்சியே கோழைத்தனமானது. அருவருப்பானது.

பலவீனமாக உள்ளது. அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய அறிவார்ந்த தலைவர் இந்த நாட்டுக்கு தேவை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா என்று பலர் கேட்கிறார்கள், கேட்பது எளிது ஆனால் பதில் சொல்வது கடினமாகும்.

சரியான தலைமையை தெரிவு செய்வதற்கு நாட்டு மக்கள் தியாகங்களைச் செய்தால் அதற்கான முன்மொழிவுகளை பரிசீலிக்க வாய்ப்பு உள்ளது. இருந்தாலும், வீட்டில் கண்ணாடி முன் பார்க்கும்போது, எதிர்காலத்தில் நாட்டை வழிநடத்தக்கூடிய ஒரு தலைவரைக் காண்கிறேன்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு வணக்கம் செலுத்த முடியும். ஏனெனில், தற்போதைய ஜனாதிபதி ரணில் ராஜபக்ஷவைப் போல ஊழல்வாதி அல்ல. ஆனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் அவருக்கு எந்த வகையிலும் ஆதரவளிக்க மாட்டேன் என்றார்.

## அதிக எடை, மிக நீளம்...

801 கிராம் என கணிப்பிடப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

உலகிலேயே மிகப் பெரிய சிறுநீரகக் கல் இதற்கு முன்னர் இந்தியாவில் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டிருந்தது.

இந்தியாவில் 2004ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சத்திர சிகிச்சை ஒன்றின் ஊடாக அகற்றப்பட்ட சிறுநீரகக் கல்லின் நீளமானது 13 சென்றிமீற்றர் என கின்னஸ் உலக சாதனையில் பதிவாகியுள்ளதாக இராணுவம் தெரிவித்தது.

அதேபோன்று, உலகிலேயே அதிக எடையை கொண்ட சிறுநீரகக் கல் பாகிஸ்தானில் அகற்றப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடத்தப்பட்ட சத்திர சிகிச்சை ஒன்றின் மூலம், உலகிலேயே அதிக எடையைக் கொண்ட சிறுநீரகக் கல் அகற்றப்பட்டதாக இராணுவத்தின் ஊடகப் பிரிவு கூறியது.

இவ்வாறான நிலையில், அதிக நீளமான மற்றும் அதிக எடைக் கொண்ட சிறுநீரகக் கல் தற்போது இலங்கையில் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தில் 22 வருட காலம் பணிபுரிந்து, ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவருக்கே இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சிப்பாய் 2019ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளார்.

இந்நிலையில், குறித்த நபருக்கு கடந்த சில காலமாக அதிக வயிற்று வலி மற்றும் சிறுநீரக கழிப்பின் போது சில சில பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இதையடுத்து, முன்னாள் இராணுவ சிப்பாய் சிகிச்சைகளுக்காக கொழும்பு - நாரஹேன்பிட்டியிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது நடத்தப்பட்ட பரிசோதனைகளில் குறித்த நபருக்கு சிறுநீரகத்தில் கல் உருவாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சையின் மூலம் குறித்த கல்லை அகற்றுவதற்கு திட்டமிட்ட வைத்திய குழாம், அதற்காக சுமார் இரண்டு வார காலம் தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே, குறித்த சத்திர சிகிச்சை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதாக விசேட வைத்தியர் லெப்டினன் கேர்ணல் வைத்தியர் குகதாஸ் சுதர்சன் தெரிவித்தார்.

நோயாளரின் பாதுகாப்பே இதில் காணப்பட்ட பிரதானமான சவாலாக இருந்தது. நோயாளருக்கு இந்தளவு பெரிய கல்லொன்றை நாங்கள் சிறுநீரகத்தில் கண்டுபிடித்த பிறகு, அதனை அகற்றும்போது பல்வேறு விதமான பின்விளைவுகளை சந்திக்க நேரிடலாம். ஒன்று சிறுநீரகம் பாதிக்கப்படலாம். அல்லது சிறுநீரகம் வெளியேறும் பகுதி பாதிக்கப்படலாம். அல்லது அதிகமான இரத்தப் போக்கு ஏற்படலாம். சிலவேளைகளில் சிறுநீரகத்தை அகற்ற வேண்டி ஏற்படலாம்.

இது சத்திர சிகிச்சை நடக்கும்போது எதிர்கொண்ட சவாலாக காணப்படுகின்றது. பல்வேறு விதமான சவால்களை நாங்கள் எதிர்நோக்கியிருந்தோம். அந்த சவால்களை நாங்கள் ஆராய்ந்து, அதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். அவசர சிகிச்சை பிரிவுகளை தயார்படுத்தி, அனைத்து தயார் நிலைகளையும் ஏற்படுத்தியிருந்தோம். அதனைத் தொடர்ந்து, அனைத்து நடவடிக்கைகளையும் கின்னஸிற்கு பதிவு செய்ய வேண்டியது இரண்டாவது சவாலாக காணப்பட்டது.

சத்திர சிகிச்சையை பதிவு செய்யும் சவால்கள், இடைநடுவில் நிறுத்தாது தொடர்ந்து பதிவு செய்ய வேண்டும். படங்கள் உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களும் வழங்கப்பட வேண்டும். இந்த வைத்தியசாலையில் இல்லாத வைத்தியர்களை அழைத்து வந்து, ஆதாரங்களை திரட்ட வேண்டும். அதற்கான ஆவணங்களை பதிவு செய்ய வேண்டும். இந்த இரண்டு பாரிய சவால்களையும் நாம் எதிர்நோக்கியிருந்தோம்" என வைத்தியர் குகதாஸ் சுதர்சன் மேலும் குறிப்பிட்டார்.

குறித்த இராணுவ சிப்பாய், 22 வருட காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அதிக காலம் பணியாற்றியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் இவர் பணியாற்றிய பகுதிகளில், குடிநீர் மற்றும் உணவு ஆகியவற்றுக்கு காணப்பட்ட தட்டுப்பாடு மற்றும் பிரச்சினைகள் இந்த சிறுநீரகக் கல் உருவாவதற்கு காரணமாக அமைந்திருக்கலாம் என வைத்தியர்கள் சந்தேகம் வெளியிடுகின்றனர்.

குறிப்பாக இராணுவ சிப்பாய் ஒருவர் எதிர்நோக்கும் பிரச்சினையையே, இந்த இராணுவ சிப்பாயும் எதிர்நோக்கியுள்ளதாக டொக்டர் குகதாஸ் சுதர்சன் குறிப்பிடுகின்றார்.

எவ்வாறாயினும், இந்த சவால்களையும் எதிர்கொண்டு, அதிக எடை மற்றும் அதிக நீளமான சிறுநீரகக் கல்லை அகற்றி, இலங்கை நாட்டுக்கு பெருமையை பெற்றுக்கொடுத்துள்ளதாக கொழும்பு இராணுவ வைத்தியசாலையின் ஜெனிட்டோ சிறுநீரகப் பிரிவின் தலைவர் விசேட வைத்தியர் லெப்டினன் கேர்ணல் வைத்தியர் குகதாஸ் சுதர்சன் தெரிவித்தார்.

# கணக்காய்வாளர் நாயகம், கோப் குழு தொடர்பில் தவறான கருத்து வெளியீடு

## மன்னிப்புக் கோரினார் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத் தலைவர் சஞ்சீபன்






ஊடகவியலாளர் சந்திப்பு காரணமாக கணக்காய்வாளர் நாயகம் மற்றும் கோப் குழு தொடர்பில் தவறான கருத்து பரப்பப்பட்டிருந்தால் மன்னிப்புக் கோருவதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத் தலைவர் ஆர். சஞ்சீபன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் நேற்றுக் கூடிய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (கோப்) புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அழைக்கப்பட்டிருந்தது.

இதன்போது புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தி கோப் குழு தொடர்பில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது. அதன்போதே தலைவர் மன்னிப்புக் கோரினார்.

இக் கூட்டத்துக்கு சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் ஆர். சஞ்சீபன், பணிப்பாளர் நாயகம் (பதில்) எம்.எம்.ஜே.பீ. அஜித் பிரேமா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரைகள் எந்தவொரு நபரையோ அல்லது நிறுவனத்தையோ இலக்காகக் கொண்டதல்ல எனவும் குழு தனது அதிகாரங்களுக்கமைய செயற்படுவதாகவும் இதன்போது கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். கணக்காய்வாளர் நாயகத்தையோ அல்லது கோப் குழுவையோ விமர்சிப்பதன் மூலம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது. இது தவறான முன்னுதாரணமாக அமையும் என்பதால் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தல், கணக்காய்வாளர் நாயகத்தின் வினவல்களிலிருந்து அவதானிக்கப்படும் விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்கு இதன்போது பணியகத்துக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அனுமதிப்பத்திரங்கள் வழங்கும்போது சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களின் அனுமதியைப் பெறுவதில் தாமதம் ஏற்படுவதாக பணியகத்தின் தலைவர் தெரிவித்தார். மாவட்ட அலுவலகங்கள் மூலம் அனுமதிப்பத்திரம் வழங்கும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, இறுதி அனுமதிக்காக பணிப்பளார் நாயகத்துக்கு அனுப்புவதாகவும் தகவலுக்காக மாத்திரமே அமைச்சருக்கு அனுப்பப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சின் சட்ட அதிகாரியொருவர் இல்லை என்பதால் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்யும்போது, மீண்டும் மேன்முறையீடு செய்யப்பட்ட பின்னரான விடயங்கள் தடைப்பட்டுள்ளமை குறித்து கவனம் செலுத்தப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் சட்ட அதிகாரியொருவரை அமைச்சுக்கு நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு அமைச்சின் செயலாளருக்கு குழு ஆலோசனை வழங்கியது.

அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்கள் சம்பந்தட்ட காலவரையறை தொடர்பிலும் அவை செயலற்றுக் காணப்படுவதாயின் அவை தொடர்பிலும் முழுமையான அறிக்கையை இரண்டு வாரங்களில் வழங்குமாறும் இதன்போது அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதன் அவசியம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய அமைச்சரவைப் பத்திரம் மூலம் சட்டத்தை திருத்துவதற்கு அதிகாரத்தைப் பெறுவதற்கு இரண்டு வாரங்களில் நடவடிக்கை எடுத்து, அதனை அறிவிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டது.

அத்துடன், அனுமதிப்பத்திரம் வழங்கும் சிக்கலான முறைமைக்குப் பதிலாக மனிதாபிமானம் கொண்ட புதிய முறைமையை அமைக்குமாறு கோப் குழுவின் தலைவர் பணிப்புரை வழங்கினார்.

ஒருசில நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கனிம ஏற்றுமதிக்கான அகழ்வு அனுமதிப் பத்திரங்களை பணியகம் மற்றும் செயலாளருக்கு அறிவிக்காமல் மாற்றப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக இதன்போது தெரியவந்தது. இவ்வாறான அனுமதிப்பத்திரத்தை 89 மில்லியன் டொலர்களுக்கு வேறு தரப்பினருக்கு விற்பனை செய்த சந்தர்ப்பம் காணப்படுவதாகப் பணியகத்தின் தலைவர் தெரிவித்தார். இந்தத் தகவலை உடனடியாகக் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குமாறு குழு அறிவுறுத்தியது.

பணியகத்துடன் தொடர்ந்து தொடர்பிலிருந்து அதன் பணிகளை மேற்பார்வையிட வேண்டியதன் அவசியத்தை செயலாளருக்கு குழு வலியுறுத்தியது. அத்துடன், புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம் தொடர்பான விசாரணைகள் மற்றும் பரிந்துரைகளை மேற்கொள்வதற்காக கடந்த கோப் குழுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட உப குழுவினால் மேற்கொள்ளப்படும் எனவும் கோப் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், அனுர பிரியதர்ஷன யாப்பா, மஹிந்தானந்த அலுத்கமகே மற்றும் எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோரும கலந்துகொண்டனர்.

# வவுனியா பழைய பேருந்து நிலையம் வரை உள்ளூர் சேவைகள்:

## வவுனியா மாவட்ட செயலாளர் தலைமையில் ஆராய்வு







(வவுனியா நிருபர்)

வவுனியா நகரத்திலுள்ள சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக வவுனியா மாவட்ட செயலாளர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இதன்போது வவுனியாவில் உள்ளூர் சேவைகளில் ஈடுபட்டுவரும் அரச, தனியார் பேருந்துகள் பழைய பேருந்து நிலையம் வரை சென்று ஐந்துநிமிடங்கள் தரித்து நின்று சேவையில் ஈடுபடவேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் பழைய பேருந்து நிலையம்வரை உள்ளூர் பேருந்து சேவைகளை நடத்துவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்குமாறு வர்த்தக சங்கத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறிப்பாக, அப்பகுதியில் அதிகளவான வியாபார நிலையங்கள் இருப்பதால் பொதுமக்கள் அங்கு வந்து செல்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, குறித்த விடயம் தொடர்பாக கரிசனை கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக அரச,தனியார் பேருந்து தரப்பினரிடமும் கருத்துகள் கோரப்பட்டன.இதன்போது பழைய பேருந்து நிலையப் பகுதிக்குள் சேவையில் ஈடுபடுவதில் தமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த நடைமுறையை அமுல்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக வடமாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தி மேலதிக நடவடிக்கையை முன்னெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் அதிகளவான கட்டணங்களை வசூலிப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக, முதலாவது கிலோமீற்றருக்கு 120 ரூபாவும் அடுத்து வரும் கிலோமீற்றர்களுக்கு 100 ரூபாவும் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த வவுனியா மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தலைவர், தற்போது வவுனியாவில் முதலாவது கிலோமீற்றருக்கு 150 ரூபாவும் அடுத்து வரும் கிலோமீற்றர்களுக்கு 100 ரூபாவும் அறவிடுவதாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றைவிட அதிகமாக கட்டணம் அறவிடப்பட்டால் குறித்த முச்சக்கரவண்டிகள் தொடர்பாக எமக்கு தெரியப்படுத்தினால் அது தொடர்பாக நாம் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்போம் என்றார்.

இக்கலந்துரையாடலில் அரச அதிபர் பி.ஏ.சரத்சந்திர,அபிவிருத்திக்குழுத் தலைவர் கு.திலீபன்,எம்.பி.மாநகரசபை செயலாளர், உதவி பிரதேச செயலாளர், வர்த்தக சங்கத்தினர், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், நடைபாதை வியாபாரி கள் சங்கத்தினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 32ம் நாள்**
**வியாழக்கிழமை**

**மேஷம்:** முக்கியமானவர்களுடன் உரையாடும் போது வார்த்தைகளைக் கவனமாகப் பிரயோகியுங்கள். தனச் சேதம் உண்டு.

**ரிஷபம்:** எதிர்பாராத வகையில் பரிசுப் பொருட்கள் கிடைக்கப்பெறுவீர்கள். வீண் மனக் குழப்பம் வேண்டாம்.

**மிதுனம்:** தேவையற்ற செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் பயணிக்கும்போது எச்சரிக்கை வேண்டும்.

**கடகம்:** பொருள் வரவும் அதனால் மன மகிழ்ச்சியும் உண்டு. வெளிநாட்டு நண்பர்களால் உதவிகள் உண்டு.

**சிம்மம்:** எதிர்பார்த்துக் காத்திருந்த உதவி எதிர்ப்பாராத வகையில் கிடைக்கும். தொழில் வியாபார லாபங்கள் உண்டு.

**கன்னி:** உங்கள் நிலையை தக்கவைத்துக் கொள்ள முழுமையான உழைப்பு அவசியம். எதிரிகளின் கை ஓங்கும்.

**துலாம்:** உடல், மனநோய்களால் அவதிப்படுவீர்கள், புதிய முயற்சிகள்எதுவும் இன்று எடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** காதல், அல்லது திருமணம் நிச்சயிக்கப் படும்,.கூட்டு வியாபார நன்மைகள், லாபங்கள் உண்டு.

**தனுசு:** தேவைக்கேற்ப பண வருவாய் அமையும். கேட்ட கடன் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மகரம்:** உடல் அசதி, நோயால் சற்று மந்த நிலையை அனுபவிப்பீர்கள். குடும்ப சுகம் உண்டு.

**கும்பம்:** தாயாரின் உடல் நிலை தொடர்பாக கவனம் செலுத்துங்கள்.வாழ்க்கை முன்னேற்ற ஏற்பாடுகளைச் செய்வீர்கள்.

**மீனம்:** எதையும் தைரியமாகத் துணிந்து செய்வீர்கள். நினைத்தபணத்தொகை உங்கள் கரங் கிட்டும்.

**திதி:** துவாதசி மு.ப.8.32 வரை பின் திரயோதசி (தேய்)
**நட்சத்திரம்:** பரணி பி.ப.2.12 வரை பின் கார்த்திகை
**யோகம் :** சித்த யோகம் பி.ப.2.12 வரை பின் மரண யோகம்
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப.10.51 - 11.51 மணி வரை
**ராகுகாலம்:** 1.21 - 2.51 மணி வரை
**எமகண்டம் :** 5.51- 7.21 மணி வரை
**குளிகை :** 8.51- 10.21 மணி வரை
**சந்திராஷ்டமம்:**கன்னி-துலாம் ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** அஸ்வினி, மகம், மூலம்; (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:**பிரதோஷ விரதம்- மிதுன சங்கராந்தி

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# மன்னார் மாவட்ட வளங்களை பாதுகாக்க கோரி போராட்டம்

## அரச அதிபரிடம் மகஜரும் கையளிப்பு







(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள வளங்களை பாதுகாக்கக்கோரி நேற்று புதன்கிழமை(14) காலை போராட்டமொன்று இடம்பெற்றது.

மன்னார் கரிட்டாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் உள்ள அலுவலகத்துக்கு முன் கரிட்டாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப்பேரணியில் இளைஞர்,யுவதிகள்,சூழல் பாதுகாப்புக் குழுவினர்,மன்னார் கரிட்டாஸ் வாழ்வுதய பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டப்பேரணியானது மன்னார் மாவட்ட செயலகம் வரை சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள வளங்களை பாதுகாக்கக் கோரும் மகஜர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கரிட்டாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளாரினால் கையளிக்கப்பட்டது.

# கடவுச்சீட்டுகளை இணையவழியில் வழங்கும் திட்டம் இன்று ஆரம்பம்

கடவுச்சீட்டுகளை இணையவழி முறையில் வழங்கும் வேலைத்திட்டம் இன்று (15) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இதன் ஆரம்ப நிகழ்வு ஹோமாகம பிரதேச செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடவுச்சீட்டை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் விண்ணப்பித்து மூன்று நாட்களுக்குள் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொடுக்க முடியுமென்றும் அமைச்சர் கூறினார்.

எவ்வாறாயினும், குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் ஒரு நாள் கடவுச்சீட்டு சேவை வழமை போன்று இயங்கும் என அமைச்சர் டிரான் அலஸ் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண மாவட்டத்தில்

# சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க இராணுவத்தினரின் ஒத்துழைப்பு அவசியம்

## இராணுவக் கட்டளைத் தளபதியிடம் யாழ். அரச அதிபர் கோரிக்கை



யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் சட்ட விரோத செயற்பாடுகள், குழு மோதல்கள், போதைப்பொருள், கால்நடைகள், மணல் கடத்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பு மிக அவசியமென யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக புதிதாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாரச்சி நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே அரசாங்க அதிபர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புத்தரப்பின் ஒத்துழைப்பு மிக மிக அவசியமாகும். காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன காணியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ள நிலையில் சீமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பொருட்கள் களவாடப்படுவதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே, இராணுவத்தினர் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் பல பொதுமக்களிடம் கையளிக்கப்படாமல் உள்ளன.

குறித்த காணிகளை அளவீடு செய்ய சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அதற்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

குறிப்பாக, மீள்குடியேறிய மக்களுக்கு இராணுவத்தினரால் 700இற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் எதிர்வரும் காலத்திலும் மீள்குடியேறிய மக்களுக்கான வீட்டு தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்திசெய்ய இராணுவத்தினர் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# 566 கிலோ மீற்றர் தூரத்தை மூன்று நாட்களில் செல்லவுள்ள இரட்டையர்கள்

## வவுனியாவுக்கு நேற்று வருகை



பொகவந்தலாவை - கொட்டியாக்கலை தோட்டத்தைச் சேர்ந்த இரட்டையர்கள் நேற்று(14) அதிகாலை 4.00 மணியளவில் தமது சாதனைப் பயணத்தை யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பித்து 9 மணித்தியாலங்களின் பின்னர் வவுனியா நகரை வந்தடைந்து அங்கிருந்து பயணத்தைத் தொடர்ந்தனர்.

இரட்டையர்களான ஆர்.ஏ.விக்னேஷ்வரன் மற்றும் தயாபரன் ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் தொடக்கம் காலி வரை 566 கிலோ மீற்றர் தூரத்தை மூன்று நாட்களில் ஓய்வெடுக்காமல் நடந்து உலக சாதனை படைக்கவுள்ளனர்.

இதேவேளை, இதற்கு முன்னர் இவர்கள் யாழில் இருந்து காலி வரையான 566 கிலோமீற்றர் தூரத்தை நான்கு நாட்கள் நடந்தும் புத்தளத்திலிருந்து சீதுவை வரையான 147 கிலோமீற்றர் தூரத்தை வெறுமனே ஆறு மணி நேரத்திலும் பயணித்து சாதனை படைத்துள்ளதுடன், கொழும்பில் இருந்து பொகவந்தலாவை வரையான 184 கிலோமீற்றர் தூரத்தை 18.5 மணித்தியாலங்களில் நடந்து சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் ஐந்துபேர் பொலிஸாரால் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு - குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக நேற்று (14) காலை 05 பேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா குடிவரவு - குடியகல்வுபிராந்திய காரியாலயத்துக்கு கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு செல்வோருக்கு இட ஒதுக்கீடுசெய்து கொடுப்பதற்கு 5,000 ரூபாவும் வரிசையின்றி உரிய நடைமுறைகளுக்கு அப்பால் கடவுச் சீட்டைப் பெற்றுக்கொடுக்க 25,000 ரூபாவும் இடைத் தரகர்களினால் பெறப்படுவதாக பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று (14) காலை முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது இடைத்தரகர்கள என சந்தேகிக்கப்படும் ஐவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜூன் 15ஆம் திகதி, வியாழக்கிழமை

# படுகுழியில் விழத் தயாராகும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனது கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் மட்டுமே அரசாங்கத்தில் இனி அங்கம் வகிக்குமென இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளமை எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், தற்போதைய அரசாங்கத்தை உருவாக்க கடுமையாக உழைத்த உறுப்பினர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படாவிட்டால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் நீடிக்க வேண்டிய அவசியமில்லையென்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இதுவரை வழங்கப்படாத அமைச்சரவை அமைச்சர் பதவிகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான பின்னணியில் அண்மையில் ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்ட அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் புறக்கணித்திருந்தனர்.

இதன் பின்னணியில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவின் நடத்தையை கடுமையாக விமர்சித்ததுடன், தமது கட்சித் தலைவர் அரச தலைவர் என்பதாலேயே அவரது செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

ஜனாதிபதியை ஓரங்கட்டும் எண்ணம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு இல்லை என்று தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை கைவிட முயற்சித்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கப் போவதில்லையென்றும் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அவர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினருக்கு ஆபத்பாந்தவன். 'கோட்டா கோ கம' போராட்டத்தின் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் வீதியில் இறங்க முடியாத நிலைமை இருந்தபோது, பாதுகாப்புப் படையினரை ஒருங்கிணைத்து பொதுஜன பெரமுனவினரைப் பாதுகாத்தவர் ரணில். அதேபோல கோட்டாபய ஆட்சிக்காலத்தில் சீரழிக்கப்பட்ட பொருளாதாரத்தைக் கொஞ்சமாவது தூக்கி நிறுத்திய பெருமை ரணிலுக்கு உண்டென்பதை மறுக்க இயலாது. அதுமட்டுமல்ல, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் ராஜபக்ஷக்கள் மற்றும் அவரது அரசியல் சகாக்கள் மீதிருந்த மக்களின் விசனத்தை தனித்தவர் ரணில். அதனால் அவர் 'ரணில் ராஜபக்ஷ' என்றும் விளிக்கப்பட்டார்.

அப்படி தேங்காய்ப்பூவும் பிட்டும் போல இருந்த ரணிலை ஓரங்கட்டி தனித்து அரசியல் செய்யத் துணிந்துள்ளது பொதுஜன பெரமுன. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெசில் ராஜபக்ஷ போட்டியிடத் தயாராக இருப்பதால், இப்போது எதிர்க்கட்சியில் அமர்ந்து எதிர்ப்பு அரசியலை செய்யத் தயாராகிறது பொதுஜன பெரமுன. அதேவேளை விரைவில் இந்தியா செல்லவிருக்கும் ரணில் அங்கு பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவுள்ள நிலையில், பலவீனமடைந்த - அரசியல் அதிகாரங்களற்ற ஒரு தலைவராக ரணிலை இந்தியாவுக்குக் காண்பிக்க வேண்டிய தேவையும் பொதுஜன பெரமுனவுக்கு இருக்கிறது. எனவே, அதனூடாக புதிய அரசியல் தலைவராக பொதுஜன பெரமுனவில் இருப்பவரை, அதாவது பெசிலை அணுகுவது நல்லதென்ற செய்தியும் நுட்பமாக இந்தியாவிடம் சொல்லப்படுகிறது.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதிபதி ரணிலுக்கான ஆதரவை வாபஸ் பெறுமாயின், அது அரசியல் ரீதியாக நன்மைகளையே ரணிலுக்குத் தரப்போகிறது. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ரணிலுடன் இப்போது இருப்பதால் எதிர்க்கட்சியில் இருந்து ரணிலுடன் இணையவிருப்போர் காட்டும் தயக்கம் நீங்கிவிடும். அது அரசியல் ரீதியாக ரணிலுக்கு வலுச் சேர்க்கும். ஏற்கனவே பொதுஜன பெரமுனவின் முக்கியமான உறுப்பினர்கள் ரணிலின் பக்கம் இருக்கின்றனர். ராஜபக்ஷக்களின் ஆதரவு இனி தனக்கு இல்லையென்று ரணில் கூறுவாராயின் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் ஆதரவும் அவருக்கு கிடைக்கும் வாய்ப்பே இருக்கிறது.

இவற்றையெல்லாம் தவிர பாராளுமன்றக் கலைப்பு என்ற பிரம்மாஸ்திரம் ரணிலின் கையில் உள்ளது. பாராளுமன்றத்தை கலைப்பதாக ரணில் அறிவித்தால் ஓய்வூதியம் கிடைக்காமல் போய்விடுமே என்ற அச்சத்தில் புதிய எம்.பிக்கள் பலர் ரணிலுடன் சேர்ந்து நிற்கும் வாய்ப்பே வரலாம். ரணிலுக்கு எதிராக குற்றப்பிரேரணை ஒன்றை கொண்டுவருவதற்குத் தானும் முன்னரைப்போல் அரசியல் பலமோ, பாராளுமன்ற பலமோ பெரமுனவுக்கு இல்லை. அப்படி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் ஒன்று நடக்குமாயின் பொதுஜன பெரமுன 10 ஆசனங்களையாவது பெறுமா என்பது கேள்விக்குறியே. ஆக மொத்தத்தில் ரணிலை விட்டுப் பிரிந்து செல்வதென்பது பொதுஜன பெரமுன சொந்த செலவில் சூனியம் வைத்துக்கொள்வதற்கு சமன்.

ஜனாதிபதி ரணில் உடல் ரீதியாக ஆரோக்கியமாக இந்தப் பதவியில் இருக்கும்வரை அவருக்கெதிரான அரசியல் செயற்பாடுகள் வெற்றியளிக்கும் வாய்ப்பு மிகவும் குறைவு. அதனால் இந்த அரசியல் சூழ்நிலையில் தனது பாதுகாப்பில் அவர் கரிசனை கொள்வதும் முக்கியமானது.

அரசியல் அதிகார வெறிகொண்டு தாண்டவமாடும் பொதுஜன பெரமுன, பட்டறிவில் பாடம் கற்கவில்லை என்றே தோன்றுகிறது. கடந்தகால அனுபவங்கள் அவர்களை புடம் போடவில்லை. இப்போது அரசியலுக்காக மேற்கொள்ளும் நாடகமும் பொதுஜன பெரமுனவினரை மேலும் அதலபாதாளத்திலேயே தள்ளப்போகிறது.

# கனவு நனவாகுமா?



**கே.எஸ். இராதாகிருஷ்ணன்**

கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்தியாவின் மத்தியில் ஆட்சி அதிகாரத்தை இழந்த காங்கிரஸ் கட்சிக்கு சமீபத்திய கர்நாடக சட்டசபைத் தேர்தல் முடிவுகள் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுத்துள்ளன. ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் கர்நாடகத்தில் வெற்றி பெற்றதுபோல் வெற்றி பெற்றுவிட முடியும் என்கிற நம்பிக்கை அக்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும், கடந்த ஒன்பது ஆண்டுகளாக ஆட்சி செய்துவரும் பா.ஜ.கவை தோற்கடிப்பது அவ்வளவு எளிதல்ல என்கிற பொதுக்கருத்தை கர்நாடக சட்டசபைத் தேர்தல் முடிவு தகர்த்திருக்கிறது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் பெற்றுள்ள வெற்றி, வரும் 2024இல் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு எதிரான வலுவானதோர் அணியை உருவாக்க அனைத்து மாநிலக் கட்சிகளையும் முடுக்கி விட்டிருக்கிறது. அதற்கான முயற்சி எடுக்கத் தூண்டியிருக்கிறது.

பா.ஜ.கவுக்கு எதிராக வலுவான ஓர் அணியை ஒன்றிணைத்து உருவாக்க வேண்டும் என்பது நாடு தழுவிய அளவில் எதிர்க்கட்சிகளின் கனவு. அந்தக் கனவு நனவாக முடியுமா, முடியாதா என்பது மிகப்பெரிய வினா.

பிகார் முதல்வரும், ஐக்கிய ஜனதா தள தலைவருமான நிதீஷ் குமார், அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து பா.ஜ.கவுக்கு எதிரான எதிர்க்கட்சி அணியை அமைப்பதற்கான முயற்சிகளில் முனைப்போடு ஈடுபட்டிருக்கிறார்.

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி (திரிணமூல் காங்கிரஸ்), தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவ் (பாரத் ராஷ்டிர சமிதி), பா.ஜ.க. அல்லாத பிற கட்சி முதல்வர்களான கேரள முதல்வர் பினராயி விஜயன் (சி.பி.எம்.), தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் (தி.மு.க.), கர்நாடக முதல்வர் சித்தராமையா (காங்கிரஸ்) ஆகியோர் பா.ஜ.கவைத் தோற்கடிக்கும் இலட்சியத்திற்கு நிச்சயம் தோள்கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதலில் 2023 ஜூன் 12 அன்று பாட்னாவில் நிதீஷ்குமாரால் திட்டமிடப்பட்டிருந்த கூட்டம் இப்போது ஜூன் 23க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்திற்குப் பல்வேறு கட்சித் தலைவர்கள் பிரதிநிதிகளை அனுப்பாமல் நேரடியாகவே வரவேண்டும் என்பது ஒரு கட்டளையாகச் சொல்லப்படுகிறது.

மேலும், இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி முக்கிய சக்தியாக முன்னிறுத்தப்படுகிறது. ராகுல் காந்தியும் அவரது தாயார் சோனியா காந்தியும் வெளிநாட்டில் இருப்பதால், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூட்டம் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்று விரும்பியதால், ஜூன்23ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மம்தா பானர்ஜி, சந்திரசேகர் ராவ் போன்ற தலைவர்கள் காங்கிரஸை முன்னிறுத்தும் திட்டத்தை விரும்பவில்லை. கேரளத்தில் காங்கிரஸுக்கு எதிராக சி.பி.எம். இருக்கிறது. மேற்கு வங்கத்தில் திரிணமூலுக்கு எதிராக காங்கிரஸும் காங்கிரஸுக்கு எதிராக சி.பி.எம்மும் திரிபுராவில் சி.பி.எம்முக்கு எதிராக காங்கிரஸும் உள்ளன.

ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியும், சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டாலும், அவை இரண்டும் காங்கிரஸை எதிர்ப்பதில் ஒற்றுமையாக உள்ளன. எனவே, பா.ஜ.கவுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவர்கள் பங்கேற்பது உறுதியில்லை.

1999ஆம் ஆண்டில் தேசியவாத காங்கிரஸ் கட்சியை நிறுவியவரும் ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சியில் அதிருப்தி தலைவராக இருந்தவருமான சரத் பவார், பா.ஜ.கவுக்கு எதிரான அணியை உருவாக்கும் முயற்சிக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார். இருப்பினும், அவர் இறுதியில் என்ன முடிவெடுப்பார் என்பது தற்போது தெரிய வாய்ப்பில்லை.

ஒடிஸா முதல்வர் நவீன் பட்நாயக் இந்த விவகாரத்தில் உறுதியாக இல்லாமல் இருக்கிறார். இதேபோல் டில்லி முதல்வரும் ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கேஜரிவால், சமாஜவாதி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ் ஆகியோரும் காங்கிரஸ் தலைமையிலான எதிரணியில் இணைந்து ஓரணியாக நிற்க சம்மதிப்பார்களா என்பது சந்தேகம்தான்.

இம்மாதிரியான அரசியல் சூழல் இந்தியாவுக்குப் புதிதல்ல. நாடு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே நேரு தலைமையிலும், பின்னர் இந்திரா காந்தியின் தலைமையிலும் காங்கிரஸ் ஏகபோக உரிமையாக அதிகாரம் செலுத்தியது என்பது அனைவரும் அறிந்ததே. 1950களில் சர்வ வல்லமை படைத்த காங்கிரஸ், வேறு எந்த கட்சியும் தனக்கு சவாலாக உருவெடுத்துவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டது. எனவே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பி.எஸ்.பி.-எஸ்.எஸ்.பி. (சோஷலிஸ்ட்), இந்து மகாசபா போன்ற கட்சிகள் மீது காங்கிரஸ் கடும் நடவடிக்கை எடுத்தது.

1970களின் முற்பகுதியில் "இந்திராவே இந்தியா - இந்தியாவேஇந்திரா'' என்ற முழக்கம் ஓங்கி ஒலித்தது. காங்கிரஸுக்கு மாற்று இல்லை. வேறெந்த கட்சிக்கும் ஆற்றலும் இல்லை என்று எடுத்துக்கூறப்பட்டது. காங்கிரஸ் கோலியாத்தைப் போல தோற்றமளித்தாலும், சில டேவிட்டுகளும் அக்கட்சியில் தோன்றத்தான் செய்தார்கள்.

1970களில், ஜெயபிரகாஷ் நாராயணனும் ஜே.பி.கிருபளானியும் நிறுவிய நவ நிர்மாண் இயக்கம் (நிதீஷ்குமார், லல்லு பிரசாத் யாதவ், ராம் விலாஸ் பாஸ்வான் ஆகியோர் இதில் உருவானவர்கள்தான்) வட இந்தியாவில் காலூன்றத் தொடங்கியது. மொரார்ஜி தேசாய், ஜெகஜீவன் ராம், சரண்சிங், வாஜ்பாய், அத்வானி, சந்திரசேகர், மது தந்தவதே, ஜொர்ஜ் பெர்னாண்டஸ், ராஜ் நாராயண் போன்ற இந்திரா காந்தி எதிர்ப்பாளர்கள் அனைவரும் அப்போது ஒன்றிணைந்தார்கள்.

இவ்வாறு காங்கிரஸ் (ஓ), இந்திய சோஷலிஸ்ட் கட்சி, பாரதிய ஜனசங்கம் (பா.ஜ.கவின் பழைய பெயர்), லோக்தளம் உள்ளிட்ட கட்சிகள் இணைந்த கூட்டணி பிறந்தது. ஜனதா கட்சி என்று பெயரிடப்பட்ட அந்தக் கலவை அணி, அதுவரை வெல்ல முடியாத கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் இருந்து தூக்கி எறிந்தது. இந்த முன்னணிக்கு தி.மு.கவும், சி.பி.எம். கட்சியும் ஆதரவு தெரிவித்தன.

1975ஆம் ஆண்டில் இந்திரா காந்தி கொண்டு வந்த அவசரநிலை பிரகடனமும், அது உருவாக்கிய அத்துமீறல் அலைகளும் தலைவர்களை வேட்டையாடிய தயவு தாட்சண்யமற்ற அடக்குமுறைகளும் ஜனதா கட்சியின் சரித்திர வெற்றிக்கு முக்கியமான காரணிகளாக இருந்தன. முதன்முதலில் காங்கிரஸ் அல்லாத கட்சியொன்று ஆட்சிக்கட்டிலில் அமர்வதை ஆச்சரியத்துடன் பார்த்தது பாரதம்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக, பின்னர் ஜனதா கட்சியில் கருத்து வேறுபாடுகள் ஏற்படத் தொடங்கின. அதிகார ஆசைகளும் ஆணவ செயல்பாடுகளும் ஜனதா கட்சியின் ஆட்சியில் மண்ணை அள்ளிப் போட்டன. மொரார்ஜியின் ஜனதா கட்சி அரசாங்கம் கவிழ்ந்து, லோக்தள் தலைவர் சரண் சிங் பிரதமரானார். தமிழகத்திலிருந்து அ.தி.மு.கவின் ஆதரவையும் பெற்றார்.

இந்நிலையில், முதன்முதலாக தமிழகத்தில் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த சத்தியவாணி முத்து, பாலா பழனூர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சர்களாக மத்தியில் பொறுப்பேற்றனர். ஆனாலும், ஒரு மாதத்திற்கு மேல் நீடிக்க முடியாமல் சரண்சிங் அரசும் கவிழ்ந்தது.

ஆதலால் 1980ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஜனதாவை சறுக்க வைத்து சரித்திரம் படைக்கும் அளவுக்கு இந்திரா காந்தி, தன் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியை மீட்டெடுத்தார்.

பின்னர் 1984 வரை இந்திரா காந்தியாலும் (1984இல் படுகொலை செய்யப்பட்டார்), பிறகு அவரது மகன் ராஜீவ் காந்தியாலும் (1991இல் படுகொலை செய்யப்பட்டார்) வழிநடத்தப்பட்ட காங்கிரஸுக்கு மாற்றாக தேசிய முன்னணி (நேஷனல் ஃபிரன்ட்) உருவான 1989 வரை காங்கிரஸ் ஆட்சி தொடர்ந்தது. தேசிய முன்னணி (1989-91) ஜனதா தளம் தலைமையிலான கட்சிகளின் கூட்டணியால் உருவாக்கப்பட்டது.

இதில் என்.டி.ராமாராவ் (தெலுங்கு தேசம்) தலைவராகவும், பிரதமரான வி.பி.சிங் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தனர்.

தமிழகத்தில் தி.மு.க, ஒருங்கிணைந்த ஆந்திராவில் என்.டி.ராமாராவ், அஸ்ஸாமில் அஸ்ஸாம் கண பரிஷத் போன்ற பிராந்திய கட்சிகள் தேசிய முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தின. இடதுசாரிக் கட்சிகள் காங்கிரஸின் மேலாதிக்கத்தைத் தகர்க்கும் சக்தியாக அந்த முன்னணியை ஆதரித்தன. அந்தக் கூட்டணியும் இரண்டு ஆண்டுகள் கூடத் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

பின்னர் ஆளும் கட்சிக்கு எதிராக ஐக்கிய முன்னணி (1996-98) என்ற அமைப்பு ஜனதா தளம், சமாஜவாதி கட்சி, தி.மு.க, தெலுங்கு தேசம், ஏ.ஜி.பி, இடதுசாரிகள், திரிணமூல் காங்கிரஸ் போன்ற கட்சிகளால் உருவாக்கப்பட்டது. பதின்மூன்று கட்சிகளைக் கொண்ட அந்தக் கூட்டணிதான் தேவகௌடாவை (ஜனதா தளம் -எஸ்) பிரதமராக்கியது. பின்னர் ஐ.கே.குஜ்ராலை பிரதமராக்கியது. இருப்பினும் அதன் ஆட்சி 1998இல் கவிழ்ந்தது.

காங்கிரஸ் இப்போது கிட்டத்தட்ட பத்தாண்டு காலமாக அரசியல் வனாந்தரத்தில் உள்ளது. 2024இல் மீண்டும் ஆட்சியைப் பிடிக்குமா என்ற கேள்விக்கான விடை, எதிர்க்கட்சிகளுக்கு இடையேயான, குறிப்பாக மாநிலக் கட்சிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகள் எப்படி முடியும் என்பதைப் பொறுத்தே உள்ளது.

பா.ஜ.கவுக்கு எதிரான அணியை வழிநடத்த காங்கிரஸ் வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் இன்றைய தேசிய அரசியலைத் திணறடித்துக் கொண்டிருக்கும் வினா. எல்லாவற்றிற்கும் மேலாக, ஜனநாயகம் உயிர்வாழ குறைந்தபட்சம் இரண்டு சமமான சக்தி வாய்ந்த கட்சிகள் தேவை. புகழ்பெற்ற அமெரிக்க நகைச்சுவை நடிகர் பாப் ஹோப்பின் வார்த்தைகள் இந்த இடத்தில் மிகவும் பொருத்தமானவை. "எந்தவொரு கட்சியாலும் எல்லா மக்களையும் எல்லா நேரத்திலும் முட்டாளாக்க முடியாது. அதனால்தான் எங்களுக்கு இரண்டு கட்சிகள் உள்ளன'' என்றார் அவர்.

ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகள் குரலை 'ஷேடோ கேபினெட் குரல்' என்று அழைப்பதுண்டு. இந்த பாட்னா மாநாடு வலுவான நிழல் கெபினெட்டை உருவாக்குமா என்பது மில்லியன் டொலர் வினாவாகும்.

(நன்றி - தினமணி)

## இன்றைய நாளில்...

- 1667 – முதலாவது மனிதக் குருதி மாற்றீடு, மருத்துவர் சான் பாப்டிஸ்ட் டெனிஸ் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.
- 1752 – பெஞ்சமின் பிராங்கிளின், மின்னல் ஒரு மின்சாரம் என்பதை நிறுவினார்.
- 1844 – இயற்கை இறப்பர் பதப்படுத்தும் முறை, சார்ள்ஸ் கூடியர் என்பவரால் காப்புரிமம் பெறப்பட்டது.
- 1846 – இலங்கையின் அரச ஆசியர் சமூகம் 'ஜேர்னல்' என்ற தனது முதலாவது இதழை வெளியிட்டது.
- 1878 – குதிரை ஒன்று ஓடுகையில் அதன் நான்கு கால்களும் தரையில் படுவதில்லை என்பதை நிறுவும் புகைப்படங்களை எதுவார்து மைபிரிட்ச் என்பவர் எடுத்தார். இவ்வாய்வே பின்னர் அசையும் திரைப்படம் உருவாக மூலமாக அமைந்தது.
- 1954 – ஐரோப்பிய கால்பந்துச் சங்கங்களின் ஒன்றியம் சுவிட்சர்லாந்தின் பாசல் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.



# ஜனநாயக ரீதியில் போராடிய எங்களுக்கு சட்டத்துக்கு புறம்பாக வழக்குத் தாக்கல்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ். விஜயத்துக்கு எதிராக, ஜனநாயக ரீதியில் போராடிய செயற்பாட்டாளர்களான எங்கள் மீது, சட்டத்துக்கு புறம்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்தார்.

கடந்த சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது அவரது வருகைக்கு எதிராக போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் உள்ளிட்ட 18 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று யாழ்.நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இந்த வழக்கில் ஆஜராகுவதற்காக நீதிமன்றிலே முற்பட்டிருந்தோம். பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியிருக்கின்ற காரணத்தினால் வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் 10ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த கைதுகள் அனைத்தும் சிங்கள பௌத்த பேரினவாதத்துடைய, தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய சட்டவிரோத கைதுகளுக்கு அஞ்சி, எங்களுடைய உரிமைப் போராட்டத்தை அடக்கலாம் என்று அரசோ அல்லது அரச இயந்திரங்களோ நினைக்கக்கூடாது எனவும் தெரிவித்தார்.

# தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு தினம்



தங்கம்மா அப்பாக்குட்டி இலங்கையில் நன்கு அறியப்பட்ட சமூக சேவையாளரும் சமயச் சொற்பொழிவாளரும் ஆவார். ஈழத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றியவர். ஏழை மக்களுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஆதரவு இல்லங்கள் அமைத்துச் சேவையாற்றி வந்தார். அத்துடன் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகச் செயற்பட்டு வந்தார்.

1925 ஜனவரி 07ஆம் திகதி யாழ்ப்பாணம், தெல்லிப்பழையில் அப்பாக்குட்டி-தையற்பிள்ளை தம்பதிக்கு பிறந்த தங்கம்மா அப்பாக்குட்டி 1929ஆம் ஆண்டு மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்ததோடு இடைநிலைக் கல்வியை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் தொடர்ந்தார். 1940ஆம் ஆண்டு க.பொ.த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்ததையடுத்து 1941ஆம் ஆண்டு சுன்னாகம் இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிக்குச் சேர்ந்தார்.

யாழ். பகுதியில் இறைவழிபாட்டை மேம்படுத்தும் வழியில் யாழ்ப்பாணத்தில் ஒரு சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் தங்கம்மா அப்பாக்குட்டிக்கு முதன்மையான பங்குண்டு. 'பண்டிதை' என அழைக்கப்பட்டுவந்த தங்கம்மா 1950-60களில் இலங்கை வானொலியின் மாதர் பகுதி உட்பட பல இடங்களில் சமயச் சொற்பொழிவுப் பணிமூலம் சமய வளர்ச்சிக்குத் தொண்டு செய்யும் வகையில் தனது சமயப்பணியைத் தொடங்கினார்.

1970களில் சிறிய கோயிலாக இருந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருத்தலத்தைக் கட்டியெழுப்பி ஆலயப் பணியுடன் மக்கள் தொண்டும் ஆற்றி வந்தார்.

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவுக்காக 'சிவத்தமிழ்ச் செல்வி' என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. மேலும் 'திருவாசகக் கொண்டல்', 'செஞ்சொற் செம்மணி', 'சிவஞான வித்தகி', 'துர்க்கா புரந்தரி' போன்ற பதினைந்துக்கும் மேற்பட்ட பட்டங்களையும் பதக்கங்களையும் பெற்றுக்கொண்டார்.

ஆலய வளாகத்தில் ஆதரவற்ற சிறுமிகளுக்கென 'துர்க்காபுரம் மகளிர் இல்லம்' என்ற பெயரில் ஆதரவு நிலையம் ஒன்றை நிறுவிச் சேவையாற்றி வந்தார். ஈழப்போரில் அகதிகளாக்கப்பட்ட பல வயோதியர்களுக்குக் கோயிலில் அடைக்கலம் கொடுத்தார். சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம், நல்லூரில் துர்க்கா தேவி மணிமண்டபம் என்பனவற்றை ஆரம்பித்துத் தொண்டாற்றினார்.

இந்நிலையில், திடீரென நோய் வாய்ப்பட்ட சிவத்தமிழ்ச் செல்வி சில வாரங்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், 2008 ஜூன் 15ஆம் திகதி நண்பகல் 12.15 மணியளவில் காலமானார். ஜூன் 16 மாலை 4மணிக்கு தெல்லிப்பழை இந்து மயானத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இவரது இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

# நில ஆக்கிரமிப்புகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் தெரிவிப்பு




நில ஆக்கிரமிப்புகள் இடம் பெற்றால் அறியத் தாருங்கள். நடவடிக்கை எடுப்பேன் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரத்தில் உள்ள சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (14) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வர்த்தக சங்கம், அங்காடி வியாபாரிகள், நகரசபை, பிரதேச சபை, அரச அதிகாரிகள் உட்பட அனைவரையும் இணைத்து கொண்டு வர்த்தகர்கள் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டிருந்தன.

அதில் நீண்ட காலமாக இருக்கக்கூடிய வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு வவுனியாவில் உள்ள உள்ளூர் சேவைகள் அதாவது தனியார், அரச பேருந்துகள் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்குச் சென்று அங்கு 5 நிமிடம் நின்று செல்வது என கலந்துரையாடப்பட்டிருக்கிறது. மேலதிக நடவடிக்கைகளுக்காக ஆளுநருக்கு தெரியப்படுத்தி அனுமதி பெற்ற பின்னர் நடைமுறைப்படுத்தப்படும்.

அன்றாட வியாபாரிகளது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அடையாள அட்டை வழங்கி அவர்களையும் வர்த்தக சங்கத்தோடு இணைத்து பயணிக்க வைப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டது. வர்த்தக சங்கங்களுக்கு இருக்கக் கூடிய உரிமை மாற்றப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டிருக்கிறது. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான இடங்களில் தற்காலிக கொட்டகைகள் அமைத்து அதில் பயன்பெறக் கூடிய வகையில் சில விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும். தொடர்ச்சியாக இவ்வாறாக மாதமாதம் கலந்துரையாடலை மேற்கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# கோணாவில் இளைஞர்களுடன் அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு

## அவர்களது எதிர்பார்ப்புகள் தொடர்பாக விரிவாக ஆராய்வு



கோணாவில், யூனியன் குளம் பகுதி இளைஞர்களை நேற்றுக் காலை சந்தித்து கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்தார்.

குறிப்பாக சிறுபோக நெற்செய்கை அறுவடைக்கு தயாராகவுள்ள நிலையில் நெல்லுக்கான நிர்ணய விலையை வழங்குமாறும் சிறு தானியப் பயிர்ச் செய்கைக்கான விதைகளை மானிய அடிப்படையில் பெற்றுத் தருமாறும் இளைஞர்கள் இதன்போது அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்ட அமைச்சர் தானிய விதைகளை பெற்றுக் கொடுப்பதற்கான மேலதிக நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்கினார்.

அதேபோன்று, நெல்லுக்கான நிர்ணய விலை நாடளாவிய ரீதியில் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில், அதுதொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும், தற்காலிகமாக தன்னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, ஒரு கிலோ நெல்லை 80 ரூபா வீதம் கொள்வனவு செய்வதற்கு விவசாய அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் பினாமிகளின் பெயரில் சீனக் கடலட்டைப் பண்ணைகள்

## இந்தியப் பிரதமர் தலையிட வேண்டுமென்கிறார் அன்னராசா



யாழ். மாவட்டத்தில் பினாமிகளின் பெயரில் சீன கடலட்டைப் பண்ணைகள் இயங்குவதாக முன்னாள் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளை தடைசெய்யுமாறு கோரி யாழ். இந்தியத் துணைத் தூதரகத்துக்கு நேற்று மகஜர் கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாகஅவர்மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் சீனக் கடலட்டைப் பண்ணைகள் பினாமிகளின் பெயரில் இயங்குகின்ற நிலையில் சீனாவில் இல்லாத நிறுவனம் இலங்கையிலிருந்து சீனக் கடலட்டைகளை ஏற்றுமதி செய்வதற்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அண்மையில் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருந்தது.

வடக்கு கடற்றொழிலையும் மீனவ மக்களையும் அந்நியப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் திரைமறைவில் பல முயற்சிகளை செய்து வருகிற நிலையில், அதற்கு அரச அதிகாரிகளும் துணை போகின்றார்கள் என்ற சந்தேகங்கள் எமக்கு எழுகின்றன. அட்டைப் பண்ணைகள் தொடர்பில் அதிகாரிகளிடம் கேட்கும் போது தாம் சில தொலைபேசி அழைப்புகளுக்கு வேலை செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாக எமக்குத் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமை தொடர்ந்தால் கடற்றொழிலை நம்பி வாழும் மீனவ மக்கள் தமது வாழ்வாதார தொழிலை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

அண்மையில் சீனாவிலிருந்து கடற்றொழிலாளர்களுக்கு 75 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாகவும் கடற்றொழில் அமைச்சர் அதனை மேற்கொள்வதாகவும் அறிந்தோம்.

ஆனால் குறித்த மண்ணெண்ணெய் சில பிரதேசங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ள நிலையில், உதவிகளை வழங்குவதாக கூறி வெளிநாட்டு சக்திகள் எமது அரிய வளங்களை அபகரிக்கக் கூடாது. ஆகவே, வடக்கில் இடம்பெறும் சீனக் கடலட்டைப் பண்ணைகளால் மக்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகளை கருத்தில் கொண்டு இந்தியப் பிரதமர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# பெண்களுக்கெதிரான வன்முறைகளை தடுக்குமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டம்





கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.

கோணாவில் சந்திரமுகி சந்தியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி கோணாவில் விளையாட்டு மைதானம் வரை சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு தடுக்குமாறு கோரும் வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். குறித்த போராட்டத்தில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# அடையாளங்களை பறைசாற்றும் ஓவியங்களை பாதுகாப்போம்

## சிவபூமி அறக்கட்டளையின் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்

**(சாவகச்சேரி நிருபர்)**



மொழிக்கு அப்பால் எமது கலை, பண்பாட்டு, பாரம்பரியங்களை உணர்வு ததும்ப வெளிப்படுத்தக்கூடிய உன்னதமான கலை அம்சமான ஓவியங்களை பாதுகாக்க வேண்டும் என சிவபூமி அறக்கட்டளையின் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ஹன்ற் ஓவியக் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சான்றோர்களை, தொண்டு செய்பவர்களை மீள நினைவுபடுத்த வேண்டியது சமுதாயத்தின் கடமை. அது அவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன். அந்த நன்றிக் கடனை ஹன்ற் ஓவியக் கூடத்தினர் சிறப்பாக செய்து வருகின்றனர். அதன் ஓர் அங்கமாக ஹன்ற்இன் உருவச்சிலை அமைக்கப்பட்டும் உள்ளது.

ஓவியம், சிற்பம், இசை இவை அனைத்தும் ஒரு சமுதாயத்தின் மிகப்பெரிய அடையாளங்கள். மொழி எவ்வாறு அடையாளமாக இருக்கின்றதோ அதற்கப்பால் கலை, பண்பாட்டு, பாரம்பரியங்களை உணர்வு ததும்ப வெளிப்படுத்தும் உன்னதமான கலை அம்சம் ஓவியமாகும்.

போர்க் காலத்தில் அவலம் நிறைந்த காட்சிகளை மாத்திரமே ஓவியங்களாக வரைந்தோம். அவை அனைத்தும் கண்ணீர் காட்சிகளாகவே அமைந்தன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் ஒரு துறையாக இருந்து பின்னர் அது பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் தீவிர முயற்சியின் பயனாக ஒரு நுண்கலை பீடமாக உருவெடுத்தது. நாவற்குழியில் உள்ள சிவபூமி அருங்காட்சியகத்தில் நுண்கலை துறை மாணவர்களது பல ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தாய்லாந்து நாட்டில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்போர் ஓவியம் மீது அதிக அக்கறையும் ஆற்றலும் கொண்டுள்ளனர். அவ்வாறு நான் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒழுங்கமைப்பில் தாய்லாந்து சென்ற போது எயிட்ஸ் நோயால் மரணப் படுக்கையில் இருந்த ஒருவர் எனக்கு வரைந்து கொடுத்த ஓவியம் இன்றும் எனது வீட்டில் உள்ளது. அவர்கள் மரணப் படுக்கையிலும் ஓவியம் வரைகிறார்கள்.

அதேபோன்று இந்தோனேசியா சிறையில் யாழ்ப்பாணத்தை வம்சாவளியாகக் கொண்ட ஓர் இளைஞன் வரைந்த நூற்றுக்கணக்கான ஓவியங்கள் இன்றும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. போதைப்பொருள் குற்றச்சாட்டில் அந்த இளைஞனை தூக்கு மேடை ஏற்றினாலும் இன்றும் அவர் வரைந்த ஓவியங்கள் இந்தோனேசிய சிறைச்சாலைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உயிர் பிரியும் நேரத்திலும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் உன்னதமான ஊடகமாக ஓவியங்கள் காணப்படுகின்றன.

காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் ஓவியங்களை காலம் முழுவதும் காப்பாற்ற வேண்டிய கடமை எம் அனைவருக்கும் உண்டு எனவும் தெரிவித்தார்.

# நஷ்டஈடு வழங்குமாறு கோரிக்கை

**(மஸ்கெலியா நிருபர்)**

ஆர்.பி.கே.பிளான்டேசனுக்குச் சொந்தமான மஸ்கெலியா புரவுன்ஷீக் தோட்ட கெஸ்கீபன் பிரிவில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய ஐந்து பெண்களும் தமக்கு நஷ்டஈடு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்குறித்த பெண் தொழிலாளர்கள் ஐவரும் கடந்த ஞாயிற்றுக் கிழமை தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறிக்கும்போது குளவிகொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இதனையடுத்து மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின்னர் நேற்று அவர்கள் வீடு திரும்பியுள்ளனர்.

இச்சம்பவம் இடம்பெற்று 4 தினங்கள் முடிவுற்றபோதும் தோட்ட நிர்வாகம் எந்த விதமான உதவிகளையும் செய்யவில்லை என பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தோட்ட நிர்வாகம் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிணறொன்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

மானிப்பாய், ஆனைக்கோட்டை பகுதி கிணறொன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த தெய்வேந்திரன் தேவராஜா (வயது 45) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மரண விசாரணையை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம், உடற்கூற்று பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## பெயர் மாற்றம்

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடை கல்லொழுவைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல. 800412102 V கொண்ட சனெத் பிரபாத் குலசூரிய ஆகிய நான் இன்று முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை முகம்மது அஸாம் என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.06.13
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5144 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,166,285.00
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 6 2 9 1 4 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3386 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,497,067.20
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 20 24 26 74

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1599 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,381,308.72
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 9 8 3 4 5 8

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1174 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,649,060.40
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 20 47 52 58

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 453 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 36 50 59 62 — விசேட இலக்கினம் மேஷம்

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1492 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 329,477,174.00
ஆங்கில எழுத்து C — சுப்பர் இலக்கம் 10 — வெற்றி இலக்கங்கள் 34 60 61 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# மூளைச்சாவடைந்து இறந்தவரின் சிறுநீரகத்தை தானமாக வழங்க உறவினர்கள் முன்வர வேண்டும்

## சிறுநீரக வைத்திய நிபுணர் மதிவாணன் கோரிக்கை

(யாழ். நிருபர்)

மூளைச்சாவடைந்து இறந்தவரின் சிறுநீரகத்தை தானமாக வழங்குவதற்கு உறவினர்கள் முன்வர வேண்டும் - என சிறுநீரக வைத்திய நிபுணர் எஸ்.மதிவாணன் கோரிக்கை விடுத்தார்.

சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ள கிரிக்கெட் போட்டி தொடர்பாக இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திடீரென ஏற்படும் விபத்து மற்றும் சில நோய் காரணமாக மூளைச்சாவடைந்து இறந்தவர்களின் இதயம் சில மணிநேரங்கள் இயங்கிக்கொண்டிருக்கும்போதே அவர்களது சிறுநீரகத்தை அறுவைச்சிகிச்சை மூலமாக தேவைப்படும் ஒருவருக்கு பொருத்த முடியும். அவ்வாறு சிறுநீரகம் தேவைப்படுகின்ற ஒருவருக்கு பொருத்துவதற்கு மூளைச்சாவடைந்து இறந்தவரின் உறவினர்கள் முன்வந்தால் இன்னொரு உயிரைக் காப்பாற்றிக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். எனவே, அவ்வாறு சிறுநீரகத்தை தானம் செய்வதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டும்.




கடந்த காலங்களில் சிறுநீரகம் செயலிழந்த ஒருவருக்கு சிறுநீரகத்தைப் பொருத்துவதற்காக கண்டி வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் சிலர் சிறுநீரகத்தைப் பெற்றுத்தருவதற்கான உதவியை வழங்கியிருக்கிறார்கள்.

தற்போது யாழ்ப்பாணத்தில் நோய் காரணமாக சிறுநீரகத்தை இழந்தவர்களுக்கு சிறுநீரகத்தைப் பொருத்துவதற்கு மூளைச்சாவடைந்து இறந்தவர்களின் உறவினர்கள் முன்வந்து வழங்கினால் அவர்கள் எப்பொழுதும் நன்றிக்குரியவர்களாகவும், பிறிதொரு உயிரை வாழவைக்கும் உயர்ந்த பாய்க்கியத்தைப் பெற்றவர்களாகவும் காணப்படுவர்.

எனவே, இது தொடர்பான விழிப்புணர்வை பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் ஏனைய பொதுமக்கள் மத்தியிலும் ஏற்படுத்தி பிற உயிரை வாழ வைக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்த முன்வர வேண்டும் – என்றார்.

# வடக்கில் வைத்தியர்கள் – சட்டத்தரணிகள் இடையே துடுப்பாட்டப் போட்டி






(யாழ். நிருபர்)

வடமாகாணத்தில் வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடையே சிநேகபூர்வமான துடுப்பாட்டப் போட்டி, வலைப்பந்தாட்டப் போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த போட்டி யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தால் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது வருடமாக நடத்தப்படவுள்ள துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை (17) காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சியாக பெண் வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடையே முதன்முதலாக வலைப்பந்தாட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே போட்டி தொடர்பான விடயங்கள் அறிவிக்கப்பட்டன.

கடந்த வருடம் முதற்றடவையாக நடத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டியில் சட்டத்தரணிகள் அணி வெற்றிபெற்றது.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# வவுனியாவில் பதிவுசெய்யப்படாத மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் பதிவுசெய்யப்படாத ஐந்து மருந்தகங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வே.மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போது கடந்த கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது.

அந்தவகையில், தனியார் மருந்தகங்களில் பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர்கள் இல்லாமல் மருந்துகள் வழங்கப்படுகின்ற விடயம் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் கருத்து வெளியிடுகையில், வவுனியாவில் 19 தனியார் மருந்தகங்கள் உள்ளன. அவற்றில் 8 மருந்தகங்கள் பதிவுசெய்யப்படவில்லை. அவற்றில் 5 மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம். ஏனைய மூன்று மருந்தகங்களை பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் எமக்கு வழங்கியுள்ளனர்.

அத்துடன், இங்கு இரண்டு மொத்த வியாபார மருந்தகங்கள் உள்ள நிலையில், அதில் ஒன்று பதிவுசெய்யப்படவில்லை. அதற்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை, வவுனியா பொது வைத்தியசாலையிலுள்ள மருந்தகங்கள் உரியநேரத்திற்கு முன்பாகவே மூடப்படுவதாக ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பாக ஆராய்வதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

# தென்னந்தோப்புக்கு தீ வைத்த விஷமிகள்



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதிப் பகுதியில் கடற்கரையை அண்மித்து அமைந்துள்ள தென்னந்தோப்புக்கு கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாத நபர்கள் தீ வைத்தமையால் பயன்தரு தென்னை மரங்கள் பலவும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

தீயானது தோப்பில் படர்ந்திருந்த புல் வழியாக பரவியதால் காய்க்கும் தென்னை மரங்கள், சிறிய தென்னம் பிள்ளைகள் என ஐம்பதுக்கும் மேற்பட்ட பயன்தரு மரங்கள் தீயில் எரிந்து நாசமாகியிருப்பதாக தோப்பின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

# கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளால் இந்திய துணைத் தூதுவருக்கு மகஜர் கையளிப்பு



(யாழ். நிருபர்)

வடக்கு கடற்றொழிலாளர்களைக் காப்பதற்கு இந்தியப் பிரதமர் மோடி ஆவன செய்யவேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவர் ஊடாக யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகள் மகஜரொன்றைக் கையளித்தனர்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழிலுள்ள இந்திய துணைத் தூதுவரைச் சந்தித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடினர்.

இதன்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மகஜர் ஒன்றையும் கையளித்து, எதிர்வரும் 15ஆம் திகதி இந்தியாவில் மீனவர்களின் மீன்பிடி தடைக்காலம் நிறைவடைகிற நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 18ஆம் திகதி

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு விழா நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மோகனதாஸ் சன சமூக நிலையத்தின் தலைவர் சு.சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் க.மகேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி சு.உஷா மற்றும் சாவகச்சேரி மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் க.சிவசுதன் ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக ஆயுர்வேத வைத்தியர் திருமதி புஷ்பராணி, சந்திரபுரம் கிராம உத்தியோகத்தர் பா.சுபாஷன், மட்டுவில் கிழக்கு கிராம உத்தியோகத்தர் செல்வி நா.தர்மினி மற்றும் மட்டுவில் வடக்கு கிராம உத்தியோகத்தர் திருமதி ம.சோபிகா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# மாணவர்களிடம் பணம் பெற்று கற்பித்தல் மேற்கொள்ளத் தடை

## மத்திய மாகாண ஆசிரியர்களுக்கு சுற்றுநிருபம்

(கண்டி செய்தியாளர்)

மத்திய மாகாண அரச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தத்தமது பாடசாலை மாணவர்களுக்கு பணம் அறவிட்டு மேலதிக வகுப்புகள் நடத்ததுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது. மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

அதே நேரம் நன்நோக்குடன் இலவசமாக மாணவர்களுக்கு மேலதிக நேரங்களில் கற்பிப்பது அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில ஆசிரியர்கள் தமது பாடசாலையில் தாம் கல்வி கற்றிப்பிக்கும் அதே மாணவர்களுக்கு பாடசாலை நேரம் அல்லாத வேளைகளில் பணம் பெற்று மேலதிக வகுப்புக்கள் நடத்துவதையே தடுத்துள்ளதாக ஆளுநர் காரியாலயம் தெரிவித்துள்ளது.




ஆர். ராஜகுமாரியின் மரணத்துக்கு நீதி கோரி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட அதிகாரி ஆர். சண்முக தீபாவின் தலைமையில் நயாபான மற்றும் அட்டப்பாகை கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டமைப்புகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டப் பேரணி புசல்லாவை, இரட்டைப் பாதையில் அண்மையில் நடைபெற்றது.

# முதியோர் இல்லத்தில் யோகா பயிற்சிகள்



(கண்டி செய்தியாளர்)

கண்டி - பேராதனை வீதியில் அமைந்துள்ள முதியோர் இல்லமொன்றில் நேற்று (14) யோகா பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. கண்டி இந்திய துணைத் தூதுரகத்தின் ஏற்பாட்டில் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கண்டி இந்திய துணைத் தூதரகம் யோகாசனத்தை பிரபல்யப்படுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகிறது. அதன் பிரகாரம் முதியோரின் மன உளைச்சலைக் குறைக்கும் வகையில் முதியோர் இல்லத்தில் யோகா பயற்சிகள் நடத்தப்பட்டன.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மரம் வீழ்ந்து கோயில் சேதம்



(கண்டி செய்தியாளர்)

புசல்லாவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எல்பொட தோட்டம் கீழ்ப்பிரிவில் உள்ள கோயிலொன்றின் மீது பாரிய ஆலமரம் ஒன்று நேற்றுமுன்தினம் வீழ்ந்ததில் கோயிலுக்கும் அதில் உள்ள பொருட்களுக்கும் சேதமேற்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இரவு வேளையிலேயே இவ்வாறு மரம் விழுந்துள்ளது. இதன்போது உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி இராமர் கோயிலுக்கு ஏற்பட்டுள்ள சேதம் தொடர்பில் தோட்ட நிர்வாகம், பிரதேச செயலகம் மற்றும் புசல்லாவை பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

# ஆசிரிய இடமாற்றங்களை இரத்துச்செய்ய வேண்டும்

## ஹைலன்ட்ஸ் கல்லூரியில் போராட்டம்




(எம். கிருஷ்ணா)

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட ஹைலன்ட்ஸ் கல்லூரியில் தசாப்தங்களை கடந்து பணியாற்றிய நிலையில், இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் அதே கல்லூரிக்கு நியமிக்கவேண்டுமெனக் கோரி நேற்றுக் காலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன், ஹைலன்ட்ஸ் கல்லூரியின் முன்றிலில் க.பொ.த சாதாரண, உயர்தர மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் இணைந்தே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் பாடசாலையில் முறையே 23, 15, 9 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையில் இருந்த மூன்று ஆசிரியர்கள் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதுடன், அந்த வெற்றிடங்களுக்குப் பதிலாக மூவர் குறித்த கல்லூரிக்கு ஹட்டன் கல்வி வலயத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஹைலன்ட்ஸ் கல்லூரியில் தசாப்தங்களைக் கடந்த நிலையில் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களை மீண்டும் அமைக்கக் கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உயர்தரப்பரீட்சை இடம்பெறவுள்ள நிலையில், இவ்வாறான இடமாற்றம் வழங்கியமை மாணவர்களின் கல்வியையும் எதிர்காலத்தையும் பாதிக்குமெனவும் அவர்களை மீண்டும் கல்லூரிக்கு நியமிக்க வேண்டுமெனவும் பெற்றோர்கள் தரப்பால் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனம் வழங்கியதற்கமைவாக உரிய ஆசிரியர்கள் தமது கடமையைச் செய்யவேண்டுமெனவும் மீறினால் அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கல்வியமைச்சினால் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

# புதிய ஆளுநர் நியமனம்; பட்டாசு கொளுத்தி கொண்டாட்டம்

(ஏ.ஏ.எம். பாயிஸ்)

சப்ரகமுவ மாகாண அளுநராக முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க நியமிக்கப்பட்டதையடுத்து இரத்தினபுரி நகரில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி நேற்றுமுன்தினம் (14) கொண்டாடினர்.

இரத்தினபுரி மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக திரண்ட ஆதரவாளர்கள் கரகோஷமெழுப்பி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

நவீன் திசாநாயக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுமுன்தினம் சப்ரகமுவ ஆளுநராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




மத்திய மாகாண புகைப்படக் கலைஞர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த ஒன்றுகூடலும் மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு விழாவும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திடைந்த வறிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் கண்டி ரோயல் கிளசிக் ரிசோல்ட் மண்டபத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரும் கௌரவ அதிதிகளாக கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் பொதுச் செயலாளர் பரமேஸ்வரனும் கண்டி பேகெட் டிஜிட்டல் ஸ்டூடியோ நிறுவத்தின் அனுசரணையாளர் முர்சலீனும் கலந்துகொண்டனர். (இக்பால் அலி)

# ஊடகத்துறையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விரிவுரையாளர்களின் ஆலோசனை

## துறைசார் மேற்பார்வைக் குழு கோரியது





ஊடகத்துறை தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களிடம் ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு ஆலோசனை கோரியுள்ளது.

ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்ஹ தலைமையில் பாராளுமன்றத்தில் அண்மையில் கூடியது. இதன்போதே மேற்குறித்த விடயம் தொடர்பாக ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

இக்குழுவுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் லலித் வர்ணகுமார தலைமைதாங்குகின்றார்.

இக்கலந்துரையாடலில் களனி பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் ஹொரண ஸ்ரீபாலி மண்டபம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஊடகத்துறையுடன் தொடர்புபட்ட விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர்.

ஊடகத்துறைக்கான கொள்கைத்திட்டத்தைத் தயாரித்தல், அலைவரிசைகளை தர வரிசைப்படுத்தும் முறை (Ratings), தரமான தொலைக்காட்சி நாடகங்கள் தயாரிக்கப்பட வேண்டிய முறை, இலங்கையில் ஊடக ஆய்வு நிறுவனமொன்றை நிறுவுதல் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் ஊடகங்கள் நடந்துகொள்ளும் முறை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அத்துடன், தரமான ஊடகச் சுட்டெண் தயாரிப்பதற்கான 10 ஆண்டு தேசியத் திட்டமொன்றை உருவாக்குவது குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமான்ன, நிபுண ரணவக்க மற்றும் இம்ரான் மஹரூப், பேராசிரியர் ரஞ்சன் ஹெட்டியாரச்சி, கலாநிதி பிரதிபா மஹாநாமஹேவா, கலாநிதி செனேஷ் திஸாநாயக்க பண்டார, சிரேஷ்ட விரிவுரையாளர்களான விஜயானந்த ரூபசிங்க, சமந்திகா பிரியதர்ஷனி மற்றும் இமேஷா தர்மசேனா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# முச்சக்கர வண்டி விபத்து! முன்பள்ளி மாணவர்கள் காயம்

## உதயபுரம் பகுதியில் சம்பவம்

அதிகளவிலான முன்பள்ளி மாணவர்களை ஏற்றிச் சென்ற முச்சக்கர வண்டி பாதையை விட்டுவிலகி விபத்துக்குள்ளானதில் 11 மாணவர்கள் உள்ளிட்ட 12 பேர் காயமடைந்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை - உதயபுரம் பகுதியில் நேற்று புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முன்பள்ளி ஒன்றுக்கு 11 மாணவர்களை ஏற்றிச் சென்ற முச்சக்கர வண்டி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. இச்சம்பவத்தில் முச்சக்கர வண்டிக்குள் இருந்த 11 மாணவர்களும் சாரதியும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த 12 பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலய சகஸ்ர சங்காபிஷேகம் நேற்றுக்காலை இடம்பெற்றது.அதனைத் தொடர்ந்து மாலை முருகப்பெருமானுக்கு திருக்கல்யாணம் இடம்பெற்று முருகப்பெருமான் வள்ளி-தெய்வானை சகிதம் வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

# தில்லையடியில் பட்டமளிப்பு விழா





புத்தளம் - தில்லையடி முஹாஜிரீன் அரபுக் கலாபீடத்தின் 2 ஆவது அல் -ஆலிம் மற்றும் அல்-ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா, கலாபீட அதிபர் மௌலவி முபாரக் அல் - ரஷாதி தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் முஹாஜிரீன் அரபுக் கலாபீட வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், கௌரவ அதிதிகளாக புத்தளம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். எச்.எம். நவவி, புத்தளம் மாவட்ட ஜம் இய்யத்துல் உலமா சபைத் தலைவர் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம், சர்வ மத குருமார்கள், மலேஷியாவிலிருந்து வருகை தந்திருந்த விஷேட பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.




வதிரி,பூவற்கரை பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

# மாணவி மீது பாலியல் சேஷ்டை சந்தேக நபருக்கு விளக்கமறியல்

மாணவியொருவரை பாலியல் தொல்லைக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 42 வயதுடைய ஆசிரியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தீவகத்திலுள்ள பாடசாலையொன்றில் தரம் 7 இல் கல்விகற்கும் 12 வயதான மாணவியொருவரே மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மாணவி தன் தாயாரிடம் முறையிட்டதையடுத்து தாயார் அதிபரிடம் முறையிட்டபோதும் உரிய நடவடிக்கையெடுக்காததையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், சந்தேகநபரான ஆசிரியர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு, நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப் பட்டார். அதன்போதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு கொழும்பு நகர சபை முன்னாள் உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ ஏற்பாடு செய்த அன்னதானம் வழங்கும் நிகழ்வு சங்கமித்த மாவத்தையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் கலந்து கொண்டார். (படங்கள்:எம். நசார்)






சிரேஷ்ட அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத்தின் கன்னிப்படைப்பான ‘வானலைகளில் ஒரு வழிப்போக்கன்’ என்ற நூலின் அறிமுக விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு அழகியற் கற்கைகள் அரங்கில் இடம்பெற்றது. இதன்போது முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (படப்பிடிப்பு: ஏ.கே.விஜயபாலன்)




முந்தல் ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் உட்கொடியேற்றம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.அன்றைய தினம் கரகம் விஷேட பூஜையும் இடம்பெற்றது. இதன்போது பக்த அடியார்கள் பலர் கலந்துகொண்டனர்.பதினெட்டு நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் தீ மிதிப்பு எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறும். (படங்கள்:உடப்பு செய்தியாளர்)

# நாவலர்சோலை முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி





யாழ்ப்பாணம், நீராவியடி சைவ பரிபாலன சபையில், நாவலர் சோலை முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த கண்காட்சி மேற்படி சபையின் தலைவர் உ.தயானந்தன் தலைமையில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

காலை 9.00மணிக்கு ஆரம்பமான கண்காட்சியில் நாவலர் சோலை முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர், சைவ பரிபாலன சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் அடிக்கல் நாட்டுவிழா



கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் நூற்றாண்டு விழாவை அடையாளப்படுத்து முகமாக நூற்றாண்டு நினைவிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கலாசாலையின் அதிபர் தலைமையில் நேற்று(14)காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கோப்பாய் நவமங்கை நிவாச நிறுவுனருமாகிய சுவர்ணா நவரத்தினம் அடிக்கல்லை நாட்டினார். இந்நினைவிடம் அவரது உபயமாக அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (14.06.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 204.0437 | 217.5082 |
| கனேடியன் டொலர் | 226.1081 | 240.8569 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.7300 | 45.0870 |
| யூரோ | 325.7842 | 345.3423 |
| ஜப்பான் யென் | 2.1576 | 2.2879 |
| சிங்கப்பூர் டொலர் | 225.1171 | 238.8108 |
| ஸ்ரேலிங் பவுன் | 381.6960 | 403.3831 |
| சுவிஸ் பிராங்க் | 333.2275 | 354.7524 |
| ஐ.அ. டொலர் | 303.1925 | 318.9974 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 804.2906 |
| குவைட் | குவைட் தினார் | 986.5605 |
| ஓமான் | ஓமான் றியால் | 787.5878 |
| கட்டார் | கட்டார் றியால் | 83.1543 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 80.8537 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரப இராச்சிய திர்ஹம் | 82.5532 |




வரலாற்று சிறப்புமிக்க திருகோணமலை சல்லியம்பதி சல்லி முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் 09ஆம் நாள் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(13) இரவு இடம்பெற்றது. இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (கிண்ணியா செய்தியாளர்)



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு ஊவா மாகாண ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை(13) இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது கிழக்கு மாகாணத்துக்கும் ஊவா மாகாணத்துக்கும் இடையிலான சுற்றுலா, கைத்தொழில், கல்வி ஆகிய இருதரப்பு வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மேலும் கிழக்கு மாகாணத்துக்கு வருகை தருமாறு ஆளுநர் முஸம்மில், பிரதம செயலாளர் மற்றும் அமைச்சின் செயலாளர்களுக்கு செந்தில் தொண்டமான் அழைப்பு விடுத்துள்ளார்.

# காத்தான்குடியில் இரத்ததான முகாம்




(காத்தான்குடி செய்தியாளர்)

சர்வதேச குருதிக் கொடையாளர்கள் தினத்தையொட்டி காத்தான்குடி தள வைத்தியசாலையின் இரத்த கொடையாளர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இரத்தக் கொடையாளர்கள் கௌரவிப்பும் இரத்ததான முகாமும் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் புதன்கிழமை(14) இடம்பெற்றன.

காத்தான்குடி தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

காத்தான்குடி தள வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பாளர் வைத்தியர் அலிமா றஹ்மான், மட்டக்களப்பு வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பாளர் வைத்தியர் திருமதி மதனழகன் மற்றும் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர், வைத்தியர் ஜே.நித்தியானந்தனா,காத்தான்குடி குருதி கொடையாளர்கள் சம்மேளனத்தின் உறுப்பினர்கள் மற்றும் குருதி கொடையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பத்து தடவைகளுக்கு மேலாக இரத்ததானம் வழங்கிய கொடையாளர்கள் நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்ட அதேவேளை, ஆண்கள் மற்றும் பெண்கள் என நூற்றுக்கும் அதிகமானோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக அட்டாளைச்சேனையை சேர்ந்த சம்சுதீன் மௌலானா இமாமுதீன் திங்கட்கிழமை(12) நியமிக்கப்பட்டுள்ளார். அம்பாறை மாவட்ட செயலகத்தில் வைத்து இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமது சாபீர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, மாவட்ட திட்டப் பணிப்பாளர் எம். அனீஸ் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (திராய்க்கேணி செய்தியாளர்)



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் பணிப்பாளராக ஏ.பி.மதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது கடமைகளை திருகோணமலை காரியாலயத்தில் புதன்கிழமை(14) பொறுப்பேற்றுக்கொண்டார். வர்த்தகத்துறை முதுமாணி(MBA) பட்டம் பெற்ற இவர் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஆவார். இதன்போது அவரது குடும்ப உறுப்பினர்கள் உட்பட ஆளுநரின் செயலாளர், மாகாண திணைக்களத் தலைவர்கள், சுற்றுலாப் பணியக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அப்துல்சலாம் யாசீம், மீனோடைக்கட்டு, கிண்ணியா செய்தியாளர்கள்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கதிர்காம பாதயாத்திரிகர்களுக்கு 'தாகத்துக்கு நீர் போத்தல்' வழங்கல்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'நிலையான சமாதானத்துக்காக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் கதிர்காம பாதயாத்திரை' தேசிய வேலைத்திட்டமான கதிர்காம பாதை யாத்திரை செல்லும் தமிழ், சிங்கள இளைஞர்களுக்கு இன நல்லுறவை கட்டியெழுப்பும் நோக்கில் 'தாகத்துக்கு நீர் போத்தல்' வழங்கி வரவேற்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(13) சாய்ந்தமருது வைத்தியசாலை முன்றலில் மாளிகா சந்தியில் இடம்பெற்றது.

சிலோன் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் போரத்தின் தலைவரும் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளருமான கலாநிதி றியாத் ஏ.மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பரின் அனுசரணையில் 200 இளைஞர்களுக்கு தாக சாந்திகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.ஜீ.ஏ.எஸ். தமயந்தி, சாய்ந்தமருது வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர், சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம், பிரதேச செயலக நிதி உதவியாளர் ஏ.சி.முஹம்மட், சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி எம்.எம்.சமிழுள் இலாஹி, சிலோன் மீடியா போரத்தின் பொதுச்செயலாளரும் நாவிதன்வெளி பிரதேச செயலக நிதி உதவியாளருமான எம்.எஸ்.எம்.முஜாஹித், சிலோன் மீடியா போரத்தின் பொருளாளரும் கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்ப பேரவை பணிப்பாளருமான யூ.எல்.என்.ஹுதா உமர், சிலோன் மீடியா போரத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள், சிலோன் மீடியா போரத்தின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வீட்டுக் கூரை வேலையில் ஈடுபட்டிருந்த இருவரை மின்சாரம் தாக்கியதில் உயிரிழப்பு

## ஒருவர் படுகாயம்; அமிர்தகழியில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள அமிர்தகழி பிரதேசத்தில் வீடு ஒன்றின் மேல் கூரையை திருத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தச்சு தொழிலாளர்கள் மீது மின்சாரம் தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் புதன்கிழமை (14) பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இருதயபுரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய றொக்கி சேய்டே என்பவரும் கருவப்பங்கேணியைச் சேர்ந்த 25 வயதுடைய ஞானபிரகாசம் கோடிசன் என்பவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவ தினம் காலைவேளையில் அமிர்தகழி பாடசாலை வீதியிலுள்ள வீட்டின் ஒருபகுதி கூரையை கொங்கிரீட் இடுவதற்காக மூவர் கழற்றி திருத்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன்போது, பகல் 11 மணியளவில் கூரையில் இருந்த தகரம் கழன்று வீதியில் இருந்து வீட்டுக்கு வரும் மின்சார வயரினை வெட்டியதையடுத்து தொழிலாளர்கள் மீது மின்சாரம் தாக்கியதிலேயே குறித்த இருவரும் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர். அத்துடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, 1919 அவசர அம்பியூலன்ஸ் சேவைக்கு தெரியப்படுத்தியதையடுத்து அவர்கள் பரிசோதித்ததில் இருவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவித்து காயமடைந்த 25 வயதுடைய இளைஞனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்.

இதேவேளை, உயிரிழந்த இருவரையும் முச்சக்கரவண்டி ஒன்றில் வீட்டின் உரிமையாளர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தேசிய ரீதியாக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து முன்னெடுக்கும் 'நிலையான சமாதானத்துக்கான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவோம் - கதிர்காம பாதயாத்திரை நிகழ்வு – 2023' மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை(13) காலை முன்னெடுக்கப்பட்டது. (மட்டக்களப்பு)

# தொழில் உபகரணங்கள் வழங்கிவைப்பு



(மட்டக்களப்பு)

அரசாங்கத்தின் கிராமத்தினுடனான கலந்துரையாடல் 2020/2021 காலப்பகுதிக்கான வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு தமது தொழிலை மேம்படுத்துவதற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை(12) இடம்பெற்றன.

கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் வேண்டுகோளின் பேரில் மண்முனை மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 46 பயனாளிகளுக்கான உபகரணங்கள் இரண்டாங்கட்டமாக வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் எஸ். பிரசாந்தன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான தொழில் உபகரணங்களை வழங்கி வைத்தார். மேலும் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சபேசன் உட்பட அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 37 மீனவர்களுக்கான தோணிகள், விவசாயிகளுக்கான 8 நீர்ப் பம்பிகள் மற்றும் விவசாய நீர்ப்பாசனத்துக்கான குழாய்கள், இரசாயன தெளிகருவி ஆகியன பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி, வெருகல் வீதி சோதனைச் சாவடியில் வைத்து 50 கிராம் 220 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் நான்கு சந்தேக நபர்களை ஈச்சிலம்பற்று பொலிஸார் செவ்வாய்க்கிழமை(13) கைதுசெய்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் இருந்து இலங்கை துறைமுகத்துவாரம் பகுதிக்கு மீன்களை ஏற்றுவதற்காக வந்த குளிரூட்டப்பட்ட லொறியில் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, ஈச்சிலம்பற்று பொலிஸாருடன் இணைந்து வெருகல் வீதி சோதனைச் சாவடியில் குறித்த லொறியை சோதனையிட்டபோது ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் களுவாஞ்சிக்குடி - செட்டிப்பாளையம் பகுதியைச் சேர்ந்த 27, 30, 35 மற்றும் 39 வயதுடையவர்களாவர்.

குறித்த சந்தேக நபர்களை பொலிஸார் தடுத்துவைத்து விசாரணை செய்து வருவதுடன், விசாரணையின் பின்னர் மூதூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

# சம்மாந்துறை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இரத்ததானம்




(சம்மாந்துறை செய்தியாளர்)

உலக இரத்த கொடையாளர் தினத்தை முன்னிட்டு கல்வியமைச்சின் கீழ் இயங்கும் சம்மாந்துறை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் (ATI) பணிப்பாளர் எஸ்.எல். முஸ்தபாவின் வழிகாட்டுதலின் கீழ் தகவல் தொழில்நுட்ப பகுதித் தலைவர் ஏ.ஏ.எம். மதீஹ் ஒத்துழைப்புடன் தகவல் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா முதலாம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு செவ்வாய்க்கிழமை(14) இடம்பெற்றது.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் குருதி வங்கி ஒத்துழைப்பு வழங்கியதோடு சம்மாந்துறை ஆதாரவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனிபா, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர்.நியாஸ் ஆகியோர் வைத்திய ஆலோசனைகளை வழங்கினர்.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முகம்மது ஹனிபா மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம் ஆகியோர் இரத்ததான முகாம் இடம்பெறும் இடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இந்நிகழ்வு திறன்பட நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய குருதி வங்கி வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய ஆங்கிலம் மற்றும் தகவல்தொழில்நுட்ப மாணவர்களுக்கும் அனுசரணை வழங்கியவர்களுக்கும் பணிப்பாளர் எஸ்.எல்.முஸ்தபா நன்றிகளை தெரிவித்தார்.

2022 /2023 கல்வியாண்டுக்கான புதிய மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள இவ்வேளையில், ஆர்வமுள்ள மாணவர்களை விண்ணப்பிக்குமாறும் 26.06.2023 ஆம் திகதியே விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி எனவும் தெரிவித்தார்.

சுமார் 65இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் இதன்போது இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்வாதாரத்தை அழிக்கும் யானைகளை சரணாலயங்களுக்கு அனுப்புக!





## மட்டக்களப்பு மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

(களுதாவளை செய்தியாளர்)

தங்களின் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் அழிக்கும் காட்டுயானைகளை சரணாலயங்களுக்கு அனுப்புமாறு கோரி மட்டக்களப்பு - செங்கலடி, பதுளை வீதியை அண்மித்த கிராம மக்கள் புதன்கிழமை (14) ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு - செங்கலடி, பதுளை வீதி சந்தியில் ஒன்றுகூடிய மக்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தி மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியூடாக ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தை சென்றடைந்தனர். பிரதேச செயலக முன்றலில் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளுடன் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம், மறுமலர்ச்சி பெண்கள் அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் பதுளை வீதியை அண்மித்த கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் மீனவ கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ''தங்களின் வாழ்வையும் வாழ்வாதாரத்தையம் அழிக்கும் காட்டு யானைகளுக்கு தீர்வு வேண்டும், எங்களின் உறவுகளை இழந்தது போதும் உடைமைகளை இழந்தது போதும் அரசே உடனடித்தீர்வு வேண்டும், எங்களை காப்பாற்று, அரசே கூடிய விரைவில் முடிவெடு, யானைகளிடமிருந்து எங்களைக் காப்பாற்று, யானைகளை வெளியேற்று, எங்களுடைய நெல், சோளம் போன்ற தானியவகைகளை சேமித்து வைக்க முடியாமல் அழிக்கிறது, அரசே யானைகளை சரணாலயத்துக்கு கொண்டுபோய் எங்களை காப்பாற்று, அறுவடை நேரத்தில் வயல்களை அழிக்கிறது, யானையால் வீடு வாசல் இழக்கிறோம், அரசே எங்களைக் காப்பாற்று'' போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவண்ணம் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், கடந்த கால யுத்த சூழ்நிலையில் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்ட எமது வாழ்வாதாரம் படிப்படியாக முன்னேற்றமடைந்து வரும் நிலையில் காட்டு யானைகள் எமது வாழ்வாதாரத்தை அழிக்கின்றன. அதேவேளை, பல உயிர்களையும் பறிகொடுத்துள்ளோம். உடைமைகள் இழக்கப்பட்டுள்ளன. இதற்கான சரியான தீர்வை அரசாங்கம் எடுக்க வேண்டும். யானை வேலி யானை வெடியினால் எவ்வித பயனும் இல்லை.

குறித்த யானைகள் வேறு இடங்களிலிருந்து எமது பிரதேசத்துக்கு இரவோடிரவாக கொண்டுவந்து விடப்பட்டுள்ளனவா என்ற சந்தேகமும் எமக்குள் எழுந்துள்ளது என்றனர்.

இதன்போது பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தெரிவிக்கையில், பதுளை வீதியை அண்டியுள்ள கிராம மக்கள் நீண்ட காலமாக விவசாயம் மற்றும் வாழ்வாதார தொழிலில் ஈடுபடும்போது யானைகளினால் பாதிப்புக்குள்ளாகி வருவதை நாம் அறிவோம். முடிந்தளவு அதனைத் தடுப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்த போதிலும் கட்டுப்படுத்த முடியவில்லை. இது தொடர்பாக உரிய திணைக்கள அதிகாரிகளுக்கு மகஜர்களை அனுப்பி எதிர்காலத்தில் அந்த மக்களை பாதுகாப்பதற்காகவும் வாழ்வாதாரத்தை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# அபிவிருத்தி செயற்பாடுகளை ஊடக மயப்படுத்தும் செயலமர்வு

(மட்டக்களப்பு)



மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேச மட்டங்களில் இடம்பெறும் அரச அபிவிருத்தி செயற்பாடுகளை ஊடக மயப்படுத்த மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைவாக பிரதேச செயலக பிரிவுகளில் இடம்பெறுகின்ற அரச நிகழ்வுகள், அபிவிருத்தி செயற்பாடுகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் தொடர்பான செய்திகளை மாவட்ட ஊடகப் பிரிவுக்கு வழங்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் மாவட்ட தகவல் அதிகாரி வடிவேல் ஜீவானந்தன் தலைமையில் செவ்வாய்க்கிழமை(13) இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தின் 14 பிரதேசசெயலகப் பிரிவுகளிலும் இடம்பெறும் நிகழ்வுகளை மாவட்ட ஊடகப் பிரிவுக்கு அறிக்கையிட நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு செய்தி அறிக்கையிடல் தொடர்பான வழிகாட்டல் மாவட்ட ஊடகப்பிரிவு வளவாளர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.மதிவண்ணன் கருத்து தெரிவிக்கையில், அரசின் விசேட நிகழ்வுகள், அபிவிருத்தி செயற்பாடுகளை மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை மிகச்சரியாகவும் துல்லியமாகவும் உடனுக்குடன் வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இச்செயலமர்வில் மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களின் மற்றும் மாவட்ட ஊடகப் பிரிவின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்ட அரச அதிபராக முஸ்லிம் ஒருவரை நியமிக்க வேண்டும்

## முஸ்லிம் எம்.பிக்களிடம் யஹியாகான் கோரிக்கை



அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக முஸ்லிம் சமூகத்தின் சார்பில் ஒருவரை நியமிக்க அனைத்து முஸ்லிம் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுபட்டு வலியுறுத்த வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸின் பதில் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அம்பாறை மாவட்டத்தின் தற்போதைய அரசாங்க அதிபர் எதிர்வரும் 20ஆம் திகதியுடன் ஓய்வு பெறுவதாக தகவல் கிடைத்துள்ளது. அதனடிப்படையில் வெற்றிடமாகும் அரச அதிபர் பதவிக்கு முஸ்லிம் சமூகம் சார்ந்த ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு அனைத்துக் கட்சி முஸ்லிம் எம்.பிக்களும் இந்த விடயத்தில் ஒற்றுமைப்பட்டு இதனை வென்றெடுக்க முயற்சிக்க வேண்டும் என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்றாக அழைத்து பேச்சு நடத்தினார். அதன்போது, மக்களின் காணிகள் அடாத்தாக சுவீகரிக்கப்படுவதை எம்.பிக்கள் கூட்டாக வலியுறுத்தி வெற்றியும் கண்டனர்.

இதேபோன்று முஸ்லிம் எம்.பிக்களும் கூட்டாக ஜனாதிபதியை சந்தித்து எமது முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை ஏன் பேச முடியாது என்ற கேள்வி இன்று மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஜனாதிபதிக்கும் மொட்டுத் தரப்பினருக்கும் இடையே தற்போது விரிசல் தோன்றியுள்ளதை ஊடகங்கள் மூலமாக அறிய முடிகின்றது. அதேபோல், முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களை அரச தரப்பு எம்.பிக்களாக பார்க்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக மற்றுமொரு தகவல் அரசியல் அரங்கில் பேசப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், இந்த அரசியல் சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்தி எமது முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் சில அடிப்படை பிரச்சினைகளையாவது தீர்க்க வழியேற்பட்டுள்ளது. அவற்றில் ஒன்றாக, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறைக்கு முஸ்லிம் ஒருவரை அரச அதிபராக நியமிக்க வலியுறுத்த முடியும். அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் திங்கட்கிழமை நடந்தபோது முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான பல விடயங்கள் முன்வைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. அபிவிருத்தி குழுத் தலைவராக பெரும்பான்மையின எம்.பி. ஒருவர் இருக்கும் போது அரச அதிபராக முஸ்லிம் ஒருவர் இருப்பது நியாயமான கோரிக்கையாகவே ஜனாதிபதியினால் பார்க்கப்படும்.

எனவே, முஸ்லிம் எம்.பிக்கள் அனைவரும் ஒன்றுபட்டு சமூகப் பிரச்சினைகளை ஜனாதிபதியுடன் நேரடியாக பேச உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றில் ஒன்றாக முஸ்லிம் அரசாங்க அதிபர் விடயமும் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன் என்றும் யஹியாகான் சுட்டிக்காட்டினார்.

# வெப்பத்தினால் அவதியுற்றோருக்கு அருள் மழையால் மகிழ்ச்சி

## மருதமுனை ஜம்மியத்துல் உலமா சபைத் தலைவர் அன்ஸார் மௌலானா தெரிவிப்பு

(சாய்ந்தமருது செய்தியாளர்)



அம்பாறை மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களில் மழை வேண்டி ஐவேளைத் தொழுகைகளிலும் குனூத் ஓதப்பட்டு வருகின்ற நிலையிலு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் செவ்வாய்க்கிழமை (13) மாலை வேளையில் நீண்ட நேரம் கனதியான மழை பெய்துள்ளதுடன் மாவட்டம் பூராகவும் குளிர்ச்சிகரமான சூழல் ஏற்பட்டிருப்பதானது மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது என்று மருதமுனை ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்-ஷெய்க் எவ்.எம்.ஏ.அன்ஸார் மௌலானா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், கிழக்கு மாகாணத்தில் நிலவும் அதிகூடிய வெப்பமான காலநிலையை தணிப்பதற்காக மழை பொழிய வேண்டி ஐவேளைத் தொழுகைகளிலும் குனூதுந் நாஸிலாவை ஓதுமாறும் அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதற்கமைவாக தற்போது தொழுகைகளின்போது குனூத் ஓதப்பட்டு வருகின்றது. இவ்வாறு குனூதில் கேட்கப்பட்ட துஆ கபூலாகியதன் காரணமாக நீண்ட காலத்துக்குப் பின்னர் இறைவனின் அருள் மழை பொழியத் தொடங்கியிருக்கின்றது.

அகோர வெப்பத்தினால் அவதியுற்ற மக்களுக்கு இம்மழையானது அளவற்ற மகிழ்ச்சியையும் நிம்மதியையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆகையினால், வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்தும் ஐவேளைத் தொழுகைகளில் குனூதுந் நாஸிலாவை ஓதி வருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இதன்மூலம் வெப்பம் தாண்டவமாடுகின்ற எல்லா இடங்களிலும் போதியளவு மழை கிடைப்பதுடன் உஷ்ணம் தணிந்து, சாதாரண காலநிலை ஏற்படும் என்ற இறை நம்பிக்கையை திடப்படுத்திக் கொள்வோமாக என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



தேர்தலை இந்த வருடத்தில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன சொல்லிப்போட்டாரு எலுவா? அடே பொடியா இது முன்பள்ளில படிக்கிற குழந்தைப்புள்ளயலுக்கும் தெரியும் இந்த வருஷம் மட்டுமல்ல வாறவருஷமும் உள்ளூராட்சி தேர்தல இழுத்தடிச்சுக்கொண்டு ஜனாதிபதி தேர்தல நடத்திற திட்டம்தான் ரணில் அம்மாச்சிக்கு இருக்கிற விசயம் மெய் எலுவா?

# கிழக்கு மாகாணத்தை முன்மாதிரியாக செயற்படுத்த மாகாண ஊடகவியலாளர்களுக்கு ஆளுநர் அழைப்பு

(மாளிகைக்காடு செய்தியாளர்)



கிழக்கிலுள்ள வளங்களை பயன்படுத்தி கிழக்கை முன்மாதிரியான மாகாணமாக முன்னேற்ற தான் அர்ப்பணிப்புடன் சேவையாற்றவுள்ளதாகவும் சுத்தமான கடற்கரை வேலைத்திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுவருவதாகவும் இன நல்லிணக்க வேலைத்திட்டங்களை அது சார்ந்தவர்களிடம் தான் கையளித்து விட்டு கிழக்கையும் நாட்டையும் முன்னேற்ற தயாராக உள்ளதாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

ஆளுநருக்கும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்குமிடையிலான சிநேகபூர்வ சந்திப்பு திங்கட்கிழமை(12) மாலை அம்பாறை ஆளுநர் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், அந்தப் பயணத்தில் ஊடகவியலாளர்களின் பங்கு அளப்பரியது என்றவகையில் தன்னுடன் இணைந்து ஊடகவியலாளர்கள் பயணிக்க வேண்டும் என்றும் மாகாண ஊடகவியலாளர்களுக்கு ஆளுநர் அழைப்புவிடுத்துள்ளார்.

மேலும், நாட்டின் கடன்சுமை அதிகரித்துள்ள நிலையில் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பது தொடர்பில் தான் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் ஆளுநர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இதன்போது கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் தமது மாவட்டம் தொடர்பிலான பல்வேறு கருத்துகளை முன்வைத்தனர். முஸ்லிம்கள் அதிகமாக வாழும் கிழக்கு மாகாணத்தில் மாகாண அமைச்சுகள் எதிலும் ஒரு முஸ்லிம் அமைச்சின் செயலாளர்கள் கூட நியமிக்கப்படாமையும் தேசிய ரீதியாகவும் அமைச்சுகளின் செயலாளர் பதவியில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமையும் மக்கள் மத்தியில் கவலையளிப்பதாக ஆளுநரிடம் சிலோன் மீடியா போரத்தின் பொருளாளர் ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர் விளக்கினார்.

சிரேஷ்ட, விசேட தர நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் கிழக்கு மாகாண சபையில் இருந்தும் அமைச்சின் செயலாளர்கள் உட்பட பொறுப்புவாய்ந்த பதவிகளில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாக கொண்ட கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் உயர் அரச அதிகாரிகளுக்கு தமிழ் மொழியறிவு அறவே இல்லாமையால் மக்கள் சேவைபெறுவதில் பலத்த அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், மீனவ துறைமுகமின்மையால் அம்பாறை மீனவர்களின் படகுகளை தரித்து நிறுத்துவதில் மீனவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், காணிப்பிரச்சினைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து கருத்துகளை வெளியிட்டார்.

சுதந்திர ஊடகவியலாளர்கள் கலாசார அமைப்பின் தலைவர் ஊடகவியலாளர் ஐ.எச்.ஏ.வஹாப் வசதிகுறைந்த, வீடற்ற ஊடகவியலாளர்களுக்கு நட்புறவு நாடுகளின் உதவியைக்கொண்டு வீடுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் மட்டக்களப்பில் நிறுத்தப்பட்டுள்ள புகையிரத பயணத்தை பொத்துவில் - ஹம்பாந்தோட்டை வரை நீடித்து மக்களுக்கு இலகுவான புகையிரத பயணத்தை மேற்கொள்ள தற்போதைய ஆளுநரின் சேவைக்காலத்தில் துரித நடவடிக்கை எடுக்குமாறும் அவர் ஆளுநரைக் கேட்டுக்கொண்டார். மேலும் கிழக்கின் கடல்வளத்தை பயன்படுத்தி ரின்மீன் உற்பத்தி தொழிற்சாலை அமைப்பது தொடர்பிலும் கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டத்தை முன்னெடுக்க வேலைத்திட்டமொன்றை செய்யுமாறும் ஆளுநரை வலியுறுத்தினார்.

இங்கு கருத்து தெரிவித்த நாம் ஊடகர் பேரவை தலைவர் ஊடகவியலாளர் யூ.எல்.மப்ரூக் உலகின் தரமிக்க தேயிலையை இலங்கையர்களும் பருகும் வாய்ப்பை கிழக்கு ஆளுநர் உருவாக்கித்தர வேண்டும் என்றும் கிழக்கின் சுற்றுலாத்துறை பற்றிய விளக்கங்களை வழங்கிய அவர், சுற்றுலாத்தளங்களில் பிரசித்தி பெற்ற இடங்களை கொண்டுள்ள கிழக்கில் உயர்ரக தேயிலை விற்பனை நிலையங்களை உருவாக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் ஊடகவியலாளர்கள் தமது பணியை சிறப்பாக செய்ய அவர்களுக்கு ஊடக உபகரணங்களை பெற உள்ள சிக்கல்களை நீக்கி அவற்றை பெற்றுக்கொடுக்க ஆளுநர் முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நுஜா ஊடக அமைப்பின் தலைவர் எஸ்.எம்.அரூஸ் கிழக்கின் ஆளுநர்களில் ஊடகவியலாளர்களை முதன்முதலாக அழைத்து பேசிய புதிய ஆளுநருக்கு நன்றிகளை தெரிவித்ததுடன் தொடர்ந்தும் ஊடகவியலாளர்களுடன் நட்புறவுடன் கூடிய உறவை பேண மக்களின் குறைநிறைகளை அவசரமாக முடிந்தளவில் நிவர்த்திக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

# காட்டு யானைகளினால் தென்னை மரங்கள் சேதம்

(மூதூர் செய்தியாளர்)



தோப்பூர் - அப்ரார் நகர் கிராமத்துக்குள் புதன்கிழமை அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் பயன்தரும் தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளன.

இதன்போது சுமார் 50க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை காட்டு யானைகள் முறித்தும் தென்னை மர குருத்துகளை சாப்பிட்டும் சேதப்படுத்தியுள்ளன. அத்தோடு பாதுகாப்பு வேலிகளுக்கும் சேதம் விளைவித்துள்ளன.

தாம் பல்வேறு கஷ்டத்துக்கும் மத்தியில் வாழ்வாதாரத்துக்காக விளைவித்த தென்னை மரங்களை யானைகள் சேதப்படுத்தியுள்ளமையால் தாம் நஷ்டமடைந்துள்ளதாக தெரிவிக்கும் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசவாசிகள், தமக்கான நஷ்டஈட்டைப் பெற்றுத்தருமாறும் யானை பாதுகாப்பு வேலி அமைத்துத்தருமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

# நீர்ப்பீடனம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம்




(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக கல்முனை பிராந்திய தொற்றுநோய் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம். பஸாலினால் நீர்ப்பீடனம் தொடர்பான முன்னாய்வு மீளாய்வுக் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த மீளாய்வில் கல்முனை சுகாதார பிராந்தியத்துக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களும் மேற்பார்வை பொது சுகாதார மாதுக்களும் பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டதுடன் சுகாதார வைத்திய அதிகாரிகள் நீர்ப்பீடனம் தொடர்பில் தத்தமது பிரதேச முன்னேற்ற அறிக்கைகளை முன்வைத்து விளக்கக்காட்சி தொகுப்புரைகளையும் வழங்கினர்.

இந்நிகழ்வின் போது தொற்று நோய்களை திறம்பட எதிர்த்துப்போராடவும் குழந்தைகள் மற்றும் தாய்மாரின் நீர்ப்பீடன சக்தியை அதிகரிப்பதற்குமான ஆலோசனையிலும் பங்குபற்றுனர்கள் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வின் போது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கான மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் முதற்கட்டமாக 05 மடிக்கணினிகள் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ.வாஜித்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமுலாக்கத்துறை அதிகாரிகளால் அமைச்சர் செந்தில்பாலாஜி கைது

## நெஞ்சு வலிப்பதாகக் கூறியதை தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதி: முக்கிய 3 இரத்தக் குழாய்களில் அடைப்பு; அறுவை சிகிச்சைக்கு பரிந்துரை





தமிழக மின்துறை அமைச்சர் செந்தில்பாலாஜியின் வீட்டில் பலமணி நேரம் சோதனை நடத்திய அமுலாக்கத்துறை அதிகாரிகள் அவரைக் கைதுசெய்து விசாரணைக்காக அழைத்துச்சென்றபோது நெஞ்சுவலிப்பதாக செந்தில்பாலாஜி தெரிவித்ததையடுத்து அவர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சென்னை ஓமந்தூரார் அரச பன்நோக்கு வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில், செந்தில்பாலாஜிக்கு இதயத்துக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தில் தடை இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்க எஞ்சியோகிராம் பரிசோதனை செய்யப்பட்டது.

இந்நிலையில், அவருக்கு பைபாஸ் அறுவைச்சிகிச்சை செய்ய ஓமந்தூரார் மருத்துவர்கள் பரிந்துரை செய்துள்ளனர். இதயத்துக்குச் செல்லும் 3 முக்கிய இரத்தக் குழாய்களில் அடைப்புள்ளதால் பைபாஸ் அறுவைச்சிகிச்சை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக ஓமந்தூரார் அரசு பன்நோக்கு வைத்தியசாலை சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று ஓமந்தூரார் வைத்தியசாலைக்கு நேரடியாகச் சென்று அமைச்சர் செந்தில் பாலாஜியை சந்தித்து நலம் விசாரித்தார்.

இதுகுறித்து முதலமைச்சர் ஸ்டாலின் தனது ட்விட்டர் பக்கத்தில்,

''விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தருகிறேன் என்று சொன்ன பிறகும் அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு நெஞ்சுவலி ஏற்படும் வகையில் சித்திரவதை கொடுத்த அமுலாக்கத்துறையின் நோக்கம் என்ன? வழக்கிற்குத் தேவையான சட்ட நடைமுறைகளை மீறி மனிதநேயமற்ற முறையில் அமுலாக்கத்துறை அதிகாரிகள் நடந்துகொண்டிருப்பது தேவையா?

பா.ஜ.கவின் இந்த மிரட்டல்களுக்கெல்லாம் தி.மு.க. அஞ்சாது. 2024 தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்'' - என பதிவிட்டுள்ளார்.

தமிழக மின்துறை அமைச்சராக இருப்பவர் செந்தில்பாலாஜி. இவர் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்தபோது 81 பேருக்கு அரச வேலை வாங்கித் தருவதாக 1.62 கோடி ரூபா மோசடி செய்துள்ளதாக பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டது.

இதில் நடந்த முறைகேடு, சட்ட விரோத பண பரிமாற்றம் தொடர்பாக செந்தில்பாலாஜி, அவரது சகோதரர் வீடு, அலுவலகங்களில் அமுலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

அமுலாக்கத்துறை அதிகாரிகள் சட்ட விரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவுசெய்து விசாரித்த நிலையில், வழக்கு தொடர்பாக துப்பாக்கி ஏந்திய துணை இராணுவப் படையினரின் பாதுகாப்புடன் சென்னை கிரீன்வேஸ் சாலையிலுள்ள அமைச்சர் செந்தில்பாலாஜியின் பங்களா, மந்தைவெளி பிஷப் கார்டன் பகுதியிலுள்ள அவரது சகோதரர் அசோக்குமார் வீடு ஆகியவற்றில் அமுலாக்கத்துறை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் (13) காலை முதல் நள்ளிரவு வரை 18 மணி நேர சோதனையை நிறைவு செய்தனர்.

செந்தில்பாலாஜியின் அறையிலும், கரூர் இராமேஸ்வரப்பட்டியிலுள்ள அவருடைய வீட்டிலும் சோதனை நடைபெற்றது. 18 மணி நேரம் நடைபெற்ற சோதனைக்குப் பின்னர், 3 தோல் பைகள், இரண்டு கைப்பைகளில் ஆவணங்களை அதிகாரிகள் எடுத்துச் சென்றதாகவும், ஒரு ஹார்ட் டிஸ்க் மற்றும் ஒரு மடிக்கணினியை எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 18 மணி நேர சோதனைக்குப் பின்னர் செந்தில்பாலாஜியை கைதுசெய்து விசாரணைக்காக அதிகாரிகள் அழைத்துச் சென்றபோது அவர் நெஞ்சுவலிப்பதாக கதறித் துடித்துள்ளார்.

இதையடுத்து, ஓமந்தூரார் அரச வைத்தியசாலைக்கு அவரை அதிகாரிகள் அழைத்துச் சென்றுள்ளனர். உடனடியாக செந்தில்பாலாஜி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மருத்துவர்கள் பரிசோதனை செய்து தீவிர மருத்துவக் கண்காணிப்பில் வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தகவல் அறிந்து செந்தில்பாலாஜியின் உடல்நலம் குறித்து விசாரிக்க அமைச்சர்கள் வைத்தியசாலைக்கு சென்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ''செந்தில்பாலாஜி நலமுடன் இருக்கிறார். அவர் மீதான வழக்கை சட்டப்படி தி.மு.க. எதிர்கொள்ளும்'' - என்றும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் செந்தில்பாலாஜி கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில், எந்த வழக்கில் அவர் கைது செய்யப்பட்டார் என அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்படவில்லை.

**விசாரணை**

இதனிடையே, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி, வைத்தியசாலைக்கு நேரில் சென்று செந்தில்பாலாஜியிடம் விசாரணை நடத்தியுள்ளார். இதனை தொடர்ந்து அவரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

### இலங்கையில் அதானி....

# காற்றாலை மின் உற்பத்தி திட்டம் 2024 இறுதியில் ஆரம்பம்

இலங்கையில் அதானி குழுமத்தின் காற்றாலை மின் உற்பத்தி 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் தொடங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் 286 மெகா வோட் மற்றும் பூனேரியில் 234 மெகா வோட் காற்றாலை மின் உற்பத்தி செய்யும் திட்டத்துக்கு இந்தியாவின் அதானி குழுமத்துக்கு கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதற்கான ரூபா 4,120 கோடி மதிப்பிலான திட்டப் பணிகள் கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இன்று குஜராத் கரையை கடக்கும் பிபர்ஜோய் புயல்

## சௌராஷ்ட்ரா - கட்ச் மாவட்டங்களுக்கு 'ரெட் அலர்ட்': 30,000 பேர் வெளியேற்றம்; 97 ரயில் சேவைகள் ரத்து



உலக செய்திகள்

அரபிக்கடலில் உருவாகியுள்ள பிப்பர்ஜோய் புயல் (Cyclone Biparjoy), இன்று கரையைக் கடக்குமென எச்சரிக்கப்பட்டுள்ளதால் குஜராத்தின் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் சுமார் 30 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு புயல் தீவிரமடைந்துள்ளதையடுத்து குஜராத்தின் சௌராஷ்ட்ரா, கட்ச் மாவட்டங்களுக்கு 'ரெட் அலர்ட்' விடுக்கப்பட்டுள்ளது.

அரபிக்கடலில் நிலைகொண்டுள்ள பிபர்ஜோய் புயல், இன்று (15) குஜராத்தின் மாண்ட்வி - பாகிஸ்தானின் கராச்சி இடையே கரையைக் கடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. புயல் கரையைக் கடக்கும்போது 135 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென்றும் குஜராத்தின் சௌராஷ்ட்ரா - கட்ச் பிராந்தியத்தின் கடலோரப் பகுதிகளில் கடும் மழை பெய்யக்கூடுமெனவும் வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து ஜாம்நகர், போர்பந்தர், ராஜ்கோட் உள்ளிட்ட 17 மாவட்டங்களில் மாநில மற்றும் தேசிய மீட்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். குஜராத், கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, லட்சத்தீவுகளைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். 95 ரயில் சேவைகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

# பயிற்சி ஆட்டத்தில் நெதர்லாந்தை வீழ்த்திய இலங்கை

இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரின் தகுதிகாண் தொடரில் விளையாட சிம்பாப்வே பயணமாகியிருக்கும் இலங்கை கிரிக்கெட் அணி, குறித்த தகுதிகாண் தொடருக்கு முன்னர் நேற்று முன்தினம் பயிற்சி ஆட்டத்தில் நெதர்லாந்தை வெற்றிகொண்டது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தை நெதர்லாந்து அணிக்கு வழங்கியது. இதன்படி போட்டியில் முதலில் துடுப்பாடிய நெதர்லாந்து அணியானது 45.3 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 214 ஓட்டங்களையே எடுத்தது. இலங்கை அணியின் பந்துவீச்சில் கசுன் ராஜித 03 விக்கெட்டுகளையும், மகீஷ் தீக்‌ஷன 02 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர்.

215 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய இலங்கை அணி ஒரு கட்டத்தில் சிறந்த ஆரம்பத்தைப் பெற்றபோதும் பின்னர் தடுமாறியது. எனினும், இலங்கை அணிக்கு கைகொடுத்த அதன் தலைவர் தசுன் ஷானக்க தான் பெற்ற அதிரடி அரைச்சதத்தோடு இலங்கையின் வெற்றியை 37.1 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 215 ஓட்டங்களுடன் உறுதி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# சீன விமான நிலையத்தில் 30 நிமிடங்கள் தடுத்து நிறுத்தப்பட்ட மெஸ்ஸி



ஆர்ஜென்ரீனா உதைபந்து ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸி சீனாவில் விமான நிலையத்தில் தடுத்துநிறுத்தப்பட்டார். சர்வதேச போட்டிக்காக கடந்த 10ஆம் திகதி சீன தலைநகர் பெய்ஜிங் சென்றபோது இந்தச் சம்பவம் நடந்துள்ளது. விமான நிலையத்தில் உடனடியாக மெஸ்ஸியை சுற்றிவளைத்த சீன எல்லை பொலிஸார், அவரை வெளியேற அனுமதிக்கவில்லை.

பெய்ஜிங்கில் உள்ள ஓர்க்கர்ஸ் ஸ்டேடியத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சர்வதேச போட்டியில் ஆர்ஜென்ரீனா விளையாடுகிறது. இதற்கிடையில் விசா தொடர்பான பிரச்சினைகள் காரணமாக அவர் விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. மெஸ்ஸி ஸ்பெயின் மற்றும் ஆர்ஜென்ரீனா ஆகிய இரண்டு நாட்டு பாஸ்போர்ட்களை வைத்திருக்கிறார்.

ஆர்ஜென்ரீனா பிரஜையான மெஸ்ஸி, தனது கடவுச்சீட்டைப் பயன்படுத்தி பயணிக்கவேண்டியிருந்தது. ஆனால், ஆர்ஜென்ரீனா பாஸ்போர்ட்டில் சில பிரச்சினைகள் இருந்ததால் தான் ஸ்பெயின் பாஸ்போர்ட்டில் பயணம் செய்துள்ளார். ஸ்பெயின் பாஸ்போர்ட் தைவானுக்கு விசா இல்லாத நுழைவை அனுமதிக்கிறது, ஆனால், மெஸ்ஸி அது சீனாவிற்குப் பொருந்தும் என்று தவறாகப் புரிந்துகொண்டு விசாவிற்கு விண்ணப்பிக்கவில்லை, இதன் விளைவாக அவர் பெய்ஜிங் வந்தவுடன் தடுத்து வைக்கப்பட்டார்.

இதன் பிறகு, மெஸ்ஸி சுமார் முப்பது நிமிடங்கள் விமான நிலையத்திலேயே இருந்தார். அதன்பிறகு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. விமான நிலையத்தில் இருந்த பாதுகாப்பு அதிகாரி பிரச்சினையை சமாளித்துக்கொண்டிருந்தார். பின்னர் மெஸ்ஸிக்கு நுழைவு விசா வழங்கப்பட்டது. அவர் விமான நிலையத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டார்.

### எல்.பி.எல். - 2023

# 18 ஆயிரம் டொலருக்கு ஏலம்போன வியாஸ்காந்த்: அடிப்படை விலையில் கோல் டைட்டன்ஸில் சிராஸ்



நான்காது லங்கா ப்ரீமியர் லீக் (எல்.பி.எல்) தொடரின் வீரர்கள் ஏலம் நேற்று கொழும்பில் அமைந்துள்ள நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்றது. இதன்போது ஐந்து அணிகளிலும் இருந்து பெரும்பாலான வீரர்களில் ஏலத்தில் கொள்வனவு செய்யப்பட்டனர்.

லங்கா ப்ரீமியர் லீக் வரலாற்றில் முதன் முறையாக வீரர்கள் ஏலம் நடைபெற்றது. குறித்த வீரர்களுக்கான ஏலத்தில் 156 வெளிநாட்டு வீரர்களும், 254 உள்ளூர் வீரர்களும் தங்களைப் பதிவு செய்திருந்தனர். 51 சுற்றுகளைக் கொண்ட எல்.பி.எல். வீரர்களுக்கான ஏலம் நேற்று நடைபெற்றது. இந்த ஏலத்தில் ஒவ்வொரு அணியும் தலா 5 இலட்சம் அமெரிக்க டொலர்களை செலவிட்டது. பத்திரிகை அச்சுக்கு செல்லும் வரையிலான ஏல விபரம் வருமாறு,

ஜவ்னா கிங்ஸ், கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ், தம்புள்ள அவுறா, பி-எவ் கண்டி, கோல் டைட்டன்ஸ் போன்ற ஐந்து அணிகள் இம்முறை எல்.பி.எல். தொடரில் களமிறங்குகின்றன.

கடந்த மூன்று எல்.பி.எல். தொடர்களிலும் ஜவ்னா கிங்ஸ் அணியில் விளையாடிய இளம் சுழற்பந்துவீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்தை ஏலத்தில் ஜவ்னா கிங்ஸ் மீண்டும் அணியில் இணைந்தது. அவர் 10 ஆயிரம் அமெரிக்க டொலர் அடிப்படை விலையிலிருந்து 18 ஆயிரம் டொலர் விலையில் கொள்வனவு செய்யப்பட்டார்.

கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணியில் ஆடிய இளம் துடுப்பாட்ட வீரர் சரித் அசலங்கவை 80 ஆயிரம் டொலருக்கு ஜவ்னா கிங்ஸ் அணி ஏலம் எடுத்தது.

ஜவ்னா கிங்ஸ் அணிக்காக ஆடிய வேகப்பந்துவீச்சாளர் பினுர பெர்ணான்டோவை 76 ஆயிரம் டொலருக்கு ஜவ்னாவுடன் போட்டியிட்டு இறுதியில் தம்புள்ள அவுறா அணி எடுத்தது.

இளம் வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் சிராஸை கோல் டைட்டன்ஸ் அணி அடிப்படை விலையான 5 ஆயிரம் டொலரில் ஏலம் எடுத்தது. இவர் முன்னதாகவும் குறித்த அணியில் ஆடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சதீர சமரவிக்ரமவை தம்புள்ள அவுறா 68 ஆயிரம் டொலருக்கு ஏலம் எடுத்தது. வேகப்பந்துவீச்சாளர் துஸ்மந்த சமீரவை பி-எவ் கண்டி அணி 70 ஆயிரம் டொலருக்கு கொள்வனவு செய்தது.

பாகிஸ்தான் அணியின் பிரபல துடுப்பாட்ட வீரர் சொஹைப் மலிக்கை ஜவ்னா கிங்ஸ் அணி அடிப்படை விலையான 50 ஆயிரம் டொலரில் ஏலம் எடுத்தது.

ஒரு சில எதிர்பார்க்கப்பட்ட வீரர்களும் கடந்த ஆண்டுகளில் எல்.பி.எல். ஆடிய வீரர்களும் ஏலத்தில் எந்த அணியாலும் கொள்வனவு செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 2023ஆம் ஆண்டுக்கான எல்.பி.எல். தொடரில் ஜூலை 30ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 20ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

# 2024 ரி20 உலகக்கிண்ணம் திட்டமிட்டபடி நடைபெறும்




## ஐ.சி.சி. அறிவிப்பு

2024ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த ரி20 உலகக் கிண்ணத் தொடரை வேறு நாடொன்றுக்கு மாற்றுவதற்கான எந்தத் திட்டமும் இல்லை என்பதை சர்வதேச கிரிக்கெட் பேரவை உறுதிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் கிரிக்கெட் நிர்வாக அமைப்பில் காணப்படும் ஸ்தீரனமற்ற தன்மை காரணமாக 2024ஆம் ஆண்டுக்கான ரி20 உலகக் கிண்ணத் தொடரை வேறு நாடொன்றுக்கு மாற்ற முடியும் என முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன. அதன்படி 2024ஆம் ஆண்டுக்கான ரி20 உலகக் கிண்ணம் ஐக்கிய இராச்சியத்திற்கு (இங்கிலாந்து, அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளுக்கு) மாற்றப்பட வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்பட்டதோடு, ஐக்கிய இராச்சியத்தில் 2030ஆம் ஆண்டு நடைபெறவிருந்த ரி20 உலகக் கிண்ணத் தொடர் மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவிற்கு பரஸ்பர ஒப்பந்த அடிப்படையில் மாற்றம் பெறலாம் எனக் கூறப்பட்டிருந்தது.

எனினும், சர்வதேச கிரிக்கெட் சபைகள் மற்றும் இங்கிலாந்து, வேல்ஸ் கிரிக்கெட் சபைகள் இணைந்து வெளியிட்டிருக்கும் அறிவிப்புக்கமைய அவ்வாறு உலகக் கிண்ணத் தொடரானது வேறு நாடொன்றுக்கு மாற்றப்படாது எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



**1987, 1999, 2003, 2007, 2015 ஆண்டுகளில் ஒருநாள், 2021 ரி20, 2023 டெஸ்ட் சாம்பியன்ஷிப் என மூவகை ஐ.சி.சி. கிண்ணங்களையும் வென்று ஆஸி. சாதனை படைத்தது. அனைத்து வகை சம்பியன் பட்டியல்களில் ஸ்டீவ் ஸ்மித், டேவிட் வோர்னர், மிட்செல் ஸ்டார்க், பெட் கம்மின்ஸ், ஜோஸ் ஹேசல்வுட் என 5 பேர் இந்த 3 விதமான கிண்ணங்களையும் வென்ற அணியில் விளையாடியுள்ளனர்.**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7